08.07.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு: சம்பா சாகுபடிக்குதண்ணீர் கிடைக்க வாய்ப்பு

மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு அதிகரித்துள்ளதால், சம்பா சாகுபடிக்கு நீர் கிடைக்கும் என விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

கர்நாடக மாநிலத்தில் காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது. இதன் பயனாக கர்நாடகத்தில் உள்ள அணைகள் நிரம்பி வருகின்றன. மழையின் காரணமாக மேட்டூர் அணைக்கு திங்கள்கிழமை காலை நொடிக்கு 1,928 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. இது செவ்வாய்க்கிழமை காலை நொடிக்கு 4 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது. நீர்வரத்து அதிகரித்ததால், செவ்வாய்க்கிழமை காலை மேட்டூர் அணையின் நீர்மட்டம் 42.94 அடியாக உயர்ந்தது. அணையிலிருந்து குடிநீர்த் தேவைக்காக நொடிக்கு 1,500 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அணையின் நீர் இருப்பு 13.65 டி.எம்.சி.யாக உள்ளது.

நடப்பாண்டில் ஜூன் 12-ஆம் தேதி மேட்டூர் அணையின் நீர் இருப்பும், வரத்தும் திருப்திகரமாக இல்லாத காரணத்தால், மேட்டூர் அணையிலிருந்து குறுவை சாகுபடிக்கு தண்ணீர் திறக்கப்படவில்லை. தற்போது நீர்வரத்து அதிகரித்துள்ளதால், விரைவில் மேட்டூர் அணையின் நீர்மட்டம் உயரும் வாய்ப்புள்ளது. அப்போது மேட்டூர் அணையிலிருந்து சம்பா சாகுபடிக்கு தண்ணீர் திறக்கப்படும் என விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

## பட்டுப் புழு, மல்பெரி உற்பத்தியில் அதிக வருமானம்



காஞ்சிபுரம்: பட்டுப் புழு மூலம் பட்டுக் கூடு தயாரிப்பதாலும், அதற்குத் தேவையான மல்பெரி செடிகளை உற்பத்தி செய்வதன் மூலமும், ஏக்கர் ஒன்றுக்கு ஆண்டுக்கு ரூ. 2 லட்சத்துக்கும் குறையாத லாபம் பெற முடியும் என்று பட்டுப் பண்ணை ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

காஞ்சிபுரம் அருகே விச்சந்தாங்கல் பகுதியில் அரசின் பட்டுப் பண்ணை இயங்கி வருகிறது. இந்தப் பண்ணையில் 1,30,000 மல்பெரி செடிகள் உள்ளன. இந்தப் பண்ணை மூலம் பட்டுப் புழு உற்பத்தி செய்வது தொடர்பாக 24 நாள் பயிற்சி விவசாயிகளுக்கு அளிக்கப்படுகிறது. பயிற்சி பெறும் விவசாயிகளுக்கும், பட்டுப் புழு வளர்க்க விரும்பும் விவசாயிகளுக்கும் பட்டுப் புழு, மல்பெரி செடி நாற்றுகள் விற்கப்படுகின்றன. பட்டுப் புழு உற்பத்தியில் ஈடுபட விரும்புபவர்களுக்கு அரசின் மூலம் பல்வேறு மானிய உதவிகளும் பெற்றுத் தரப்படுகின்றன. இவற்றை முறையாகப் பயன்படுத்தி விவசாயிகள் பட்டுப் புழுக்களையும், அதற்குத் தேவையான மல்பெரி செடிகளையும் வளர்த்து அதிக லாபம் ஈட்டலாம் என்று பட்டுப் பண்ணை ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

முதலில் பட்டுப் புழுக்களை வளர்க்க வேண்டுமானால் மல்பெரி செடிகளை வளர்க்க வேண்டும். மல்பெரி நாற்றுகள் காஞ்சிபுரம் விச்சந்தாங்கல் பகுதியில் உள்ள அரசுப் பட்டுப் பண்ணைகளில் கிடைக்கிறது. இதுபோல் பல்வேறு மாவட்டங்களில் உள்ள பட்டுப் பண்ணைகளிலும் கிடைக்கின்றன. ஒரு செடி ரூ. 1.50 என்ற விலையில் கிடைக்கிறது. ஒரு ஏக்கருக்கு 5,240 செடிகள் தேவைப்படும். இந்தச் செடிகளை வாங்கி வந்து நட்டு, மூன்று மாதங்கள் வளர்க்க வேண்டும். முதல் மூன்று மாதங்கள் வளர்த்தால், அவை பட்டுப் புழுவுக்கான உணவாக தயாராகிவிடும். இவை 30 ஆண்டுகளுக்கு தொடர்ந்து வளர்ந்து பயன் கொடுக்கக்கூடியவை ஆகும்.

இந்த மெல்பெரி செடி வளர்ப்பதற்கு 60 நாள்கள் ஆகும்போதே பட்டுப்புழு வளர்ப்பதற்கான ஒரு கூரைக் கொட்டகையையும், அலமாரிகள் போன்று சட்டங்களை போட்டு படுக்கைகளையும் (ரேக்) அமைக்க வேண்டும். 8 முதல் 10 நாள்கள் வளர்ந்த பட்டுப் புழுக்கள் அந்தந்த அரசு பட்டுப் பண்ணைகளிலேயே கிடைக்கின்றன. இவற்றைக் கொண்டு வந்து, அந்த ரேக்குகளில் விட்டு வளர்ந்துள்ள மல்பெரி செடிகளை அதன் மேல் போட வேண்டும். அதனை பட்டுப் புழுக்கள் உண்ண ஆரம்பிக்கும். முதலில் குறைவாக உண்ணும் புழுக்கள் 20 நாள்களை நெருங்கும்போது அதிக அளவில் உண்ணுவதுடன் 24 நாள்கள் கடந்த பின் கூடு கட்டும். அந்த கூடுகள்தான் பட்டு நூலுக்குத் தேவையான மூலப்பொருளாகும். ஒரு ஏக்கர் மல்பெரி செடிக்கு தேவையான புழுக்களை வளர்ப்பதன் மூலம், மாதம்தோறும் 100 கிலோ கூடுகளை எடுக்க முடியும்.

ஒரு கிலோ பட்டுக் கூடுகள் ரூ. 920-க்கு தற்போது விற்பனை செய்யப்படுகின்றன. இதன்மூலம் மாதத்துக்கு ரூ.92 ஆயிரம் வருமானம் கிடைக்கிறது. செலவு, ஆட்கள் கூலி ஆகியவை கழிக்கப்பட்டால் கூட மாதம் ரூ.20 ஆயிரத்தில் இருந்து ரூ.30 ஆயிரத்துக்கு குறைவில்லாத வருமானம் கிடைக்கும் என்று பட்டுப்புழு வளர்ப்பவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து காஞ்சிபுரம் விச்சந்தாங்கல் பட்டுப்பண்ணை ஆய்வாளர் அலெக்ஸாண்டரிடம் கேட்டபோது அவர் கூறியது:

பட்டுப் புழு வளர்ப்பதற்கு முதலில் மல்பெரி செடி வளர்ப்பது, கொட்டகை அமைப்பது ஆகியவற்றுக்குத்தான் அதிக செலவு ஆகும். ஆனால் அதற்கும் அரசு சார்பில் பல்வேறு மானிய உதவிகள் வழங்கப்படுகின்றன. குறிப்பாக 1,000 சதுர

அடியில் கொட்டகை அமைப்பவர்களுக்கு ரூ.87,500 மானிய உதவி அளிக்கப்படுகிறது. இதை அமைப்பதற்கு மொத்தம் ரூ.1.5 லட்சம் செலவாகும். இதேபோல் மருந்துகள், மோட்டார் உள்ளிட்டவற்றுக்கும் மானிய உதவிகள் அளிக்கப்படுகின்றன. ஒரு முறை செலவு செய்துவிட்டால், மாதம்தோறும் வருமானம் கொடுக்கும். இந்த பட்டுக் கூடுகளை அரசே கொள்முதல் செய்வதால் விற்பனையில் எந்தச் சிக்கலும் இல்லை. இந்தக் கூடுகளில் இருந்து தான் பட்டு நூல்கள் தயாரிக்கப்படுகினறன.

தற்போது பட்டுக் கூடுகள் கிலோ ரூ.920-க்கு விற்பனை செய்யப்படுகின்றன.

ஒரு ஏக்கரில் மல்பெரி செடி வளர்த்து, அதில் உள்ள தழைகள் மூலம் பட்டுப் புழு வளர்த்தால் 1,600 கிலோ பட்டுக் கூடுகள் எடுக்க முடியும். இது விலை மிகவும் குறைந்து கிலோ ரூ.200-க்கு எடுக்கப்பட்டு, 100 கிலோ எடுக்க முடிந்தால் கூட ஏக்கரில் ஆண்டுக்கு ரூ.2 லட்சம் வருமானம் கிடைக்கும். ரூ. 80 ஆயிரம் செலவு போனால் கூட, ரூ. 1.2 லட்சம் லாபம் கிடைக்கும். இது விவசாயிகளுக்கு லாபகரமான தொழிலாகும். உடுமலைப்பேட்டை போன்ற இடங்களில் அதிகம் பட்டுக்கூடு உற்பத்தி செய்கின்றனர். இதற்குத் தேவையான பயிற்சிகளை, காஞ்சிபுரம் பட்டுப் பண்ணை மூலம் அளிக்க தயாராக உள்ளோம். பயிற்சி பெற விரும்பும் விவசாயிகள், 94458 38713 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என்று அவர் தெரிவித்தார்.

## 10 ஆயிரம் மரக்கன்றுகள் நடும் திட்டம்: செய்யூர் அருகே இன்று தொடக்கம்

ஈஷா அமைப்பின் சார்பில் காஞ்சிபுரம் மாவட்டத்துக்குள்பட்ட செய்யூர் அருகேயுள்ள கயப்பாக்கத்தில் உள்ள விவசாய நிலத்தில் 10 ஆயிரம் மரக்கன்றுகள் நடும் திட்டம் வெள்ளிக்கிழமை தொடக்கப்படுகிறது.

மரக்கன்று நடுவதால் தமிழகத்தின் பசுமைப் பரப்பை 10 சதவீதம் அதிகரிக்கும் நோக்கத்துடனும், வேளாண் காடுகள் உருவாக்கவும் ஈஷா அமைப்பின் பசுமைக் கரங்கள் திட்டத்தின் மூலம் 20 லட்சத்துக்கும் மேற்பட்டோரின் பங்களிப்போடு 2.80 கோடிக்கும் மேற்பட்ட மரங்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

இந்த நிலையில், சோனி (இந்தியா) நிறுவனத்துடன் இணைந்து கயப்பாக்கத்தில் 10 ஆயிரம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தை அந்த நிறுவனத் தலைவர் சஞ்சய்பட் நாயர் வெள்ளிக்கிழமை தொடக்கிவைக்கிறார்.

## ரூ.14.30 லட்சத்துக்கு பருத்தி ஏலம்

அவிநாசியில் ரூ.14.30 லட்சத்துக்கு புதன்கிழமை பருத்தி ஏலம் நடைபெற்றது.

அவிநாசி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் வாரந்தோறும் பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. இந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் 766 பருத்தி மூட்டைகள் கொண்டு வரப்பட்டிருந்தன. இதில், ஆர்.சி.எச் ரகப் பருத்தி குவிண்டாலுக்கு ரூ.5,000 முதல் ரூ.5,800 வரையிலும், மட்ட ரகப் பருத்தி ரூ.1,400 முதல் ரூ.1,800 வரையிலும் ஏலம் போனது. மொத்தம் ரூ.14 லட்சத்து 30 ஆயிரத்துக்குப் பருத்தி ஏலம் நடைபெற்றது.

இந்த ஏலத்தில் பென்னாகரம், கிணத்துக்கடவு, கோபி, நம்பியூர், அன்னூர், திருப்பூர், பல்லடம், சேவூர், குன்னத்தூர், அவிநாசி, புளியம்பட்டி, மேட்டூர், அன்னூர் ஆகிய பகுதிகளிலிருந்து 109 பருத்தி விவசாயிகளும், கோவை, ஈரோடு பகுதிகளிலிருந்து 12 பருத்தி வியாபாரிகளும் கலந்து கொண்டனர்.

## பொங்கலூர் அரசு விதை பண்ணையில் ஆட்சியர் ஆய்வு

பல்லடத்தை அடுத்த பொங்கலூர் அரசு விதைப் பண்ணையில் 3 ஏக்கர் பரப்பளவில் எண்ணெய் பனை சாகுபடி செய்யப்பட்டுள்ளதை மாவட்ட ஆட்சியர் ச.ஜெயந்தி புதன்கிழமை ஆய்வு செய்தார்.

பொங்கலூர் தேவணம்பாளையத்தில் அரசு விதைப் பண்ணை 39.05 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இதில், 33.05 ஏக்கரில் பயிர் சாகுபடி நடைபெற்று வருகிறது. மக்காச்சோளம், சோளம், எண்ணெய் வித்துக்கள் மற்றும் பசுந்தாள் உர உற்பத்தி செய்யப்பட்டு விற்கப்படுகிறது. தற்போது 3 ஏக்கர் பரப்பளவில் எண்ணெய் பனை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தமிழக அளவில் இங்குள்ள அரசுப் பண்ணையில் மட்டுமே வீரிய ஒட்டுரக மக்காச்சோள விதை உற்பத்தி செய்து மாநிலம் முழுவதும் அனுப்பி வைக்கப்படுகிறது.

மேலும், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தில் மாதிரி விதைப் பண்ணையாக உருவாக்க ரூ. 41.53 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 15 ஏக்கரில் சொட்டு நீர் பாசனம் அமைத்தல், சூரிய சக்தியில் இயங்கும் மோட்டார் பொருத்துதல் போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதை மாவட்ட ஆட்சியர் ச.ஜெயந்தி புதன்கிழமை ஆய்வு செய்தார். இதைத் தொடர்ந்து, ஊரக வளர்ச்சித் துறை பணிகளையும் அவர் பார்வையிட்டார். ஆய்வின்போது, ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் ரூபன் சங்கர்ராஜ், கூட்டுறவு இணைப் பதிவாளர் குமார் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## நீலகிரி மாவட்டத்தில் அதிகபட்சமாக 29 மி.மீ. மழை பதிவு

நீலகிரி மாவட்டத்தில் புதன்கிழமை அதிகபட்சமாக 29 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் கடந்த 2 நாள்களாக மழை பெய்யவில்லை. இருப்பினும் கடும் குளிர் நிலவி வந்தது. இந்நிலையில் புதன்கிழமை இரவு பரவலாக மழை பெய்தது.

இதில், மாவட்டத்திலேயே அதிக அளவாக தேவாலாவில் 42 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

மாவட்டத்தின் பிற பகுதிகளில் பதிவான மழை விவரம் வருமாறு (அளவு மில்லி மீட்டரில்):

அப்பர்பவானி-29, அவலாஞ்சி-27, கூடலூர்-21, எமரால்டு-20, உதகை-16, குந்தா-11, நடுவட்டம்-9.2, கிளன்மார்கன்-8, கோத்தகிரி-7, கேத்தி-6, குன்னூர்-4.5, கெத்தை-1 மி.மீ.

## "ஈரோடு மாவட்டத்தில் ரூ.320 கோடி பயிர்க் கடன் தள்ளுபடி'

ஈரோடு மாவட்டத்தில் ரூ. 320.81 கோடி பயிர்க் கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாக சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கே.சி.கருப்பணன் தெரிவித்தார்.

பவானியை அடுத்த ஒலகடம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் 68 உறுப்பினர்களுக்கு ரூ. 44.42 லட்சம் மதிப்பிலான கடனுதவி வழங்கும் நிகழ்ச்சி வியாழக்கிழமை நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சியர்

எஸ்.பிரபாகர் தலைமை வகித்தார். திருப்பூர் மக்களவை உறுப்பினர் வி.சத்யபாமா, ஈரோடு மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கித் தலைவர் என்.கிருஷ்ணராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில, பயனாளிகளுக்கு கடனுதவியை வழங்கி சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கே.சி.கருப்பணன் பேசியதாவது:

தமிழக அரசு அனைத்துத் தரப்பு மக்களின் நல்வாழ்வுக்காக பல்வேறு நலத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. தேர்தல் வாக்குறுதியின்படி, விவசாயிகளின் ரூ. 5,360 கோடி கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, ஈரோடு மாவட்டத்தில் 54,640 விவசாயிகளின் ரூ. 320.81 கோடி பயிர்க் கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றார். இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் ரெ.சதீஷ், மக்களவை முன்னாள் உறுப்பினர் என்.ஆர்.கோவிந்தராஜர், இணைப் பதிவாளர் சந்தானம், ஆவின் துணைத் தலைவர் வி.ஏ.சுப்பிரமணியன், சங்கத் தலைவர் வி.பி.வடிவேல், ஈகோ பிரஸ் தலைவர் எஸ்.எஸ்.சித்தையன், அம்மாபேட்டை ஒன்றிய அதிமுக செயலர் வி.எஸ்.சரவணபவா, வழக்குரைஞர் ஆர்.செந்தில்குமரன் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

## மொடக்குறிச்சி விற்பனைக் கூடத்தில் தேங்காய், கொப்பரை ஏலம்

மொடக்குறிச்சி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் தேங்காய், கொப்பரை ரூ. 2.63 லட்சத்துக்கு ஏலம் நடைபெற்றது.

மொடக்குறிச்சி மற்றும் சுற்று வட்டார பகுதி விவசாயிகள் 125 மூட்டையில் 3 ஆயிரத்து 38 கிலோ எடையுள்ள கொப்பரையை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.

இதில், முதல் தரம் அதிகபட்ச விலையாக கிலோ ரூ. 58.50-க்கும், குறைந்தபட்ச விலை ரூ. 44.65-க்கும், இரண்டாம் தரம் அதிகபட்ச விலை ரூ. 44.65-க்கும், குறைந்தபட்ச விலை ரூ. 35.50-க்கும் விற்பனையானது. மொத்தம் ரூ. 1 லட்சத்து 40 ஆயிரத்துக்கு ஏலம் நடைபெற்றது.

இதேபோல், 10 டன் எடையுள்ள 27 ஆயிரத்து 576 தேங்காய்கள் விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

இதில் அதிகபட்ச விலையாக டன்னுக்கு ரூ. 12 ஆயிரத்து 595-க்கும், குறைந்த விலை டன்னுக்கு ரூ. 10 ஆயிரத்து 701-க்கும், சராசரி விலை 11 ஆயிரத்து 675-க்கும் விற்பனையானது. மொத்தம் ரூ. 1 லட்சத்து 23 ஆயிரத்துக்கு ஏலம் நடைபெற்றது.

**"வெளிநாட்டுப் பருத்தியை அனுமதிக்கக் கூடாது'**

வெளிநாட்டுப் பருத்தியை இந்தியாவுக்குள் அனுமதிக்கக் கூடாது என கோவை, ஈரோடு மாவட்ட பஞ்சாலைத் தொழிலாளர் கூட்டு நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கோவை, ஈரோடு மாவட்ட பஞ்சாலைத் தொழிலாளர் கூட்டு நடவடிக்கைக் குழுக் கூட்டம் ஏ.ஐ.டி.யூ.சி. அலுவலகத்தில் மு.தியாகராசன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இதில், நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் விவரம்:

என்.டி.சி. ஆலையில் ஏற்படும் தொழில் தகராறுகளை மத்தியத் தொழிலாளர் ஆணையர் முன்னிலையில் விசாரிக்கப்பட்டு, தீர்வுகாண வேண்டும் என்ற முடிவால் தொழில் ஆவணங்கள், வேலை நிறுத்தங்கள் போன்றவற்றில் விரைந்து தீர்வு காண முடிவதில்லை. இதனால், தொழில் ஆவணங்கள், நீதிமன்ற வழக்குகளில் ஆண்டுக் கணக்கில் தீர்வு காணப்படாத சூழ்நிலை ஏற்படுகின்றன.

எனவே, முன்பு இருந்ததுபோல என்.டி.சி. ஆலைகளின் தொழில் தகராறுகள், மாநிலத் தொழிலாளர் துறை மூலமாகத் தீர்வு காணப்படுமானால் பிரச்னைகளுக்கு எளிதில் தீர்வுகாண முடியும். எனவே, தமிழக அரசின் தொழிலாளர் துறை அதிகாரிகள் முன் தொழில் ஆவணங்களுக்குத் தீர்வு காணும் முறையில் மத்திய, மாநில அரசுகள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

பஞ்சாலையில் பணிபுரியும் பயிற்சியாளருக்கான குறைந்தபட்ச ஊதியம் குறித்த உத்தரவு தமிழக அரசால் பிறப்பிக்கப்பட்டு நான்கு ஆண்டுகள் ஆன நிலையிலும், ஒரு சில ஆலைகளைத் தவிர பெரும்பாலான ஆலைகளில் அமல்படுத்தப்படவில்லை.

இதுகுறித்து தமிழக அரசின் தொழிலாளர் துறை அதிகாரிகள், அமைச்சர்கள் ஆகியோரிடம் புகார் தெரிவித்தும் எவ்விதத் தீர்வும் காணப்படவில்லை. எனவே,

இதுகுறித்து முதல்வர் மற்றும் தொழிலாளர் நல அமைச்சர் ஆகியோரைச் சந்தித்து நடவடிக்கை எடுக்க வலியுறுத்தப்படும். என்.டி.சி. ஆலைகளில் நிலுவையில் உள்ள அனைத்துப் பிரச்னைகளுக்கும் தீர்வுகாண எல்.பி.எஃப் மற்றும் மண்டலத் தொழிற்சங்கம் உள்ளிட்ட அனைத்து சங்கக் கூட்டத்தை ஆகஸ்ட் முதல் வாரத்தில் ஐ.என்.டி.யூ.சி. அலுவலகத்தில் நடத்த வேண்டும்.

வெளிநாட்டுப் பருத்தியை இந்தியாவுக்குள் அனுமதிக்கக் கூடாது. உள்நாட்டில் விளையும் பருத்தியை இந்தியப் பஞ்சாலைகளுக்கு முன்னுரிமை கொடுத்து, பஞ்சாலைத் தொழிலைப் பாதுகாக்க வேண்டும். மூலப்பொருளான பஞ்சுக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில், வெளிநாட்டு முதலாளிகள் தங்கள் விருப்பம்போல் பஞ்சு வியாபாரம் செய்துகொள்ள அனுமதிப்பது பஞ்சாலைத் தொழிலுக்கு கடும் நெருக்கடியை ஏற்படுத்தும். மேலும், இந்திய முதலாளிகள் பஞ்சைக் கொள்முதல் செய்து இருப்புவைத்து கொள்ளை லாபம் சம்பாதிக்கும் நிலையும் ஏற்படும். எனவே, அன்னிய முதலாளிகளின் வர்த்தகக் கொள்கையை மத்திய அரசு தடை செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## பராமரிப்புப் பணிகள் நிறைவு: செக்கானூர் கதவணையில் தண்ணீர் தேக்கும் பணி தொடக்கம்

செக்கானூர் கதவணை பராமரிப்புப் பணிகள் நிறைவுபெற்றதைத் தொடர்ந்து, கதவணையில் தண்ணீர் தேக்கும் பணி மீண்டும் தொடங்கியது.

மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறக்கும் போது நீரின் வேகத்தை பயன்படுத்தி மின் உற்பத்தி செய்வதற்காக 5 இடங்களில் கதவணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் மேட்டூர் அருகே செக்கானூர் கதவணையில் அரை டி.எம்.சி. தண்ணீர் தேக்கி வைக்கப்படும். இதனால் காவிரியில் செயல்படுத்தப்படும் பல்வேறு குடிநீர்க் கிட்டங்களுக்கு தண்ணீர் தடையின்றி கிடைத்து வருகிறது. இந்த கதவணைகளில் பராமரிப்புப் பணிகள் நடைபெறும் காலங்களில் தேங்கி வைக்கப்படும் தண்ணீர் நெரிஞ்சிப்பேட்டை கதவணைக்கு திறந்துவிடப்படும். அப்போது மேட்டூர் பகுதியில் குடிநீர்க் கிட்டங்களுக்கு தண்ணீர் எடுப்பதில் சிக்கல் ஏற்படும். நிகழாண்டில் மே மாதம் இறுதியில் செக்கானூர் கதவணையில் பராமரிப்புப் பணிகள் தொடங்கின. இப்பணிகள் கடந்த செவ்வாய்க்கிழமை (ஜூலை 5) நிறைவடைந்தன.

இதையடுத்து பழுதடைந்த மதகுகளும் மாற்றப்பட்டன. பராமரிப்புப் பணிகள்

நிறைவடைந்ததைத் தொடர்ந்து கடந்த செவ்வாய்க்கிழமை முதல் செக்கானூர் கதவணையில் தண்ணீர் தேக்கும் பணிகள் தொடங்கின. இங்கு தண்ணீர் தேக்கப்படுவதால் சேலம் மாநகராட்சி தனிக் குடிநீர்த் திட்டம், பி.என்.பட்டி, வீரக்கல்புதூர், கோனூர் கூட்டுக்குடிநீர்த் திட்டம், காடையாம்பட்டி கூட்டுக்குடிநீர்த் திட்டம், வேலூர் மாவட்ட கூட்டுக்குடிநீர்த் திட்டம், மேட்டூர் நகராட்சி தனிக்குடிநீர்த் திட்டம் உள்ளிட்ட குடிநீர்த் திட்டங்களுக்கு தண்ணீர் தடையின்றி கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

நாமக்கல்-மோகனூர் சாலையில் 4,000 மரக்கன்றுகள் நடத் திட்டம்

சாலை விரிவாக்கப் பணி முடிந்ததும் இருபுறமும் 4,000 மரக்கன்றுகள் நடவு செய்து பராமரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்று நாமக்கல் வனச் சரக அலுவலர் கனகரத்தினம் தெரிவித்தார்.

நாமக்கல் மாவட்டம், மோகனூர்-நாமக்கல் சாலையில் 13 கி.மீ. தூரத்துக்கு ரூ.64 கோடி செலவில் சாலை விரிவாக்கப் பணி கடந்த சில மாதங்களாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்காக சாலையின் இருபுறமும் புளியன் மற்றும் வேப்பமரங்கள் அகற்றப்பட்டன. சாலைப் பணிகள், இரண்டு மாதங்களில் நிறைவு பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. பணிகள் முடிந்தவுடன், சாலையின் இருபுறமும் மரக்கன்றுகள் நடவு செய்து பராமரிக்க வனத் துறைக்கு மாவட்ட ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து மாவட்ட வனச் சரகர் கனகரத்தினம் கூறியது: நாமக்கல் மாவட்டம், லத்துவாடி முதல், மோகனூர் வரை உள்ள 13 கி.மீ. தூரத்துக்கு சாலை விரிவாக்கப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப் பணி முடிந்ததும் சாலையின் இருபுறமும் மரக்கன்றுகள் நடவு செய்து பராமரிக்க ஆட்சியர் உத்தரவிட்டுள்ளார். அதற்காக கொல்லிமலை அடிவாரம் நடுக்கோம்பையில் நாற்றங்கால் பராமரிக்கப்பட்டு வருகிறது. அங்கு புளியன், நாவல், புங்கன், வேம்பு, ஆல் அரசு போன்ற பல்வேறு ரக மரக்கன்றுகள் நடப்பட்டு, முறையாகப் பராமரிக்கப்படும். சாலையில் இருபுறமும், 4,000 மரக்கன்றுகள் நட்டு, பராமரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்றார்.

## முட்டை விலை

நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழு வியாழக்கிழமை அறிவித்த முட்டை பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ.4.35, சென்னையில் ரூ.4.60. கறிக்கோழி விலை பல்லடம் பிராய்லர் ஒருங்கிணைப்புக்குழு வியாழக்கிழமை அறிவித்த கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.105, முட்டைக்கோழி கிலோ ரூ.76.

## நடவுக்குத் தயார் நிலையில் 9 லட்சம் மரக்கன்றுகள்!

தருமபுரி மாவட்டத்தில், உயிர்ப்பன்மைப் பாதுகாப்பு - பசுமையாக்கல் திட்டம் மற்றும் மாபெரும் மரம் நடும் திட்டம் ஆகியவற்றின் கீழ் நடுவதற்காக 9 லட்சம் மரக்கன்றுகள் வனத் துறையின் 7 நாற்றங்கால்களில் தயார் நிலையில் இருக்கிறது.

தருமபுரி வனக் கோட்டம், அரூர் வனக் கோட்டம் மற்றும் மேட்டூர் மண் வளப் பாதுகாப்புத் திட்டம் ஆகிய மூன்றும் இணைந்து இதற்கான பணிகளை தீவிரமாக மேற்கொண்டு வருகின்றன.

தமிழ்நாடு உயிர்ப்பன்மைப் பாதுகாப்பு மற்றும் பசுமையாக்கல் திட்டம் தனியார் நிலங்களிலும் ஏராளமான மரங்களை நட்டு "பசுமைப் போர்வை'யை உருவாக்கும் திட்டமாகும்.

இத் திட்டத்தில் பட்டா நிலமுள்ள தனிநபர்கள் யாரும் தங்களது ஆவணங்களை (பட்டா, குடும்ப அட்டை நகல்கள், புகைப்படம்) அளித்து ஏக்கருக்கு 200 மரக்கன்றுகளை இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

அத்துடன் மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, வளர்ந்த மரத்துக்கு ரூ. 5 வீதம் ஊக்கத் தொகையையும் வனத் துறை வழங்குகிறது. ஆர்வத்தில் மரக்கன்றுகளை நட்டுவிட்டு பிறகு அவற்றை அழித்துவிட்டு வேறு பயிருக்கு மாறிவிடுவதைத் தடுக்க இதுபோன்ற திட்டத்தை வனத் துறை செயல்படுத்துகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ், தருமபுரி மாவட்டத்தில் 7 லட்சம் மரக்கன்றுகள் நடவு செய்யப்படவுள்ளன. தேக்கு, மலைவேம்பு, பீநாரி (தீக்குச்சி மரம்), சில்வர் ஓக், பூவரசு, புளியன், காட்டு நெல்லி, பாதாம் ஆகிய 8 வகையான மரக்கன்றுகள் நாற்று விடப்பட்டுள்ளன.

மாபெரும் மரம் நடும் திட்டம் தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் பிறந்த நாளையொட்டிய மரம் நடும் திட்டமாகும். இத்திட்டத்தில் தருமபுரி மாவட்டத்தில் மட்டும் 2 லட்சம் மரக்கன்றுகளை நடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில், புங்கன், வேம்பு, பரம்பை, வெள்வேள், நெல்லி, புளியன், ஆயான், பாதாம், குடைவேள், மயில்கொன்றை ஆகிய 10 வகையான மரக்கன்றுகள் நாற்று விடப்பட்டுள்ளன.

தருமபுரி மாவட்டத்தில் நாற்றங்கால் உற்பத்திக்காகவே தொப்பூரை அடுத்த கட்டமேடு, பாலஜங்கமனஅள்ளி, பைசஅள்ளி, பூனாசனஅள்ளி, மாரண்டஅள்ளி, பாப்பாரப்பட்டி, பெரியதப்பை ஆகிய 7 இடங்களில் நாற்றங்கால்கள் அமைக்கப்பட்டுள்ளதாகக் கூறினார் மண்வளப் பாதுகாப்பு அலுவலர் கே. ராஜேந்திரன்.

கடந்த 4 மாதங்களாக நாற்று விடப்பட்ட நாற்றங்கால்கள் தற்போது செழித்து வளர்ந்து நடவு செய்வதற்கு ஏற்ற நல்ல வளர்ச்சியைப் பெற்றிருக்கின்றன.

மாபெரும் மரம் நடும் திட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலமாக பெரும்பகுதி மரக்கன்றுகளும், மற்றவை வனத்துறையின் எல்லைக்குள்பட்ட பகுதிகளிலும் நடவு செய்யப்படவுள்ளன.

வரும் ஆகஸ்ட், செப்டம்பர் மற்றும் அக்டோபர் ஆகிய மூன்று மாதங்களில் 9 லட்சம் மரக்கன்றுகளையும் நடவு செய்வதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் வனத்துறை அலுவலர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

## நாற்று நடவு முறையில் துவரை சாகுபடி செய்ய வலியுறுத்தல்

நாற்று நடவு முறையில் துவரை சாகுபடி செய்ய வேளாண் துறை அதிகாரிகள் வலியுறுத்தினர்.

வேளாண் துறை மூலம் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், நாற்று நடவு முறையில் துவரை பயிர் சாகுபடி செய்ய நாற்றங்கால் அமைக்கப்பட்டுள்ளது.

இந் நாற்றங்காலை வியாழக்கிழமை பார்வையிட்டு, வேளாண் துணை இயக்குநர் (உழவர் பயிற்சி நிலையம்) பாஸ்கரன், வேளாண் உதவி இயக்குநர் (நல்லம்பள்ளி) அமுதவள்ளி ஆகியோர் விவசாயிகளுக்கு, துவரை நாற்று நடவுமுறை தொழில்நுட்பம் குறித்து விளக்கமளித்துப் பேசியது: தருமபுரி மாவட்டத்தில் கடந்த

ஆண்டு சுமார் 23 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் துவரை சாகுபடி செய்யப்பட்டது. இதில் நல்லம்பள்ளி வட்டாரத்தில் மட்டும் 2,500 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டது. ஜூன், ஜூலை மாதங்கள் துவரை சாகுபடி செய்ய ஏற்ற பருவமாகும்.

துவரை பயிர் நாற்று நடவு முறையில் சாகுபடி செய்ய ஏக்கருக்கு ஒரு கிலோ விதை போதுமானது. ஒரு கிலோ விதையுடன் 2 கிராம் திரம் அல்லது டிரைக்கோடெர்மா விரிடி பூஞ்சாணைக்கொல்லி மருந்தைக் கலந்து, 24 மணி நேரம் வைத்திருந்து பின் ஒரு பாக்கெட் ரைசோபியம் நுண்ணுயிர் கொண்டு விதைநேர்த்தி செய்து 200 காஜ் தடிமன் பாலித்தீன் பைகளில் மணல், மண், எரு ஆகியவற்றை சம அளவில் கலந்து பைகளை நிரப்பி விதைகளை 1 செ.மீ. ஆழத்தில் விதைக்க வேண்டும். பைகளில் தண்ணீர் தேங்குவதைத் தவிர்க்க 4 துளைகள் இடவேண்டும். விதைப்பு செய்யப்பட்ட பாலித்தீன் பைகளை சூரிய ஒளி, நிழல் உள்ள இடத்தில் வைத்து, நீர் தெளித்து 30 முதல் 40 நாள்கள் பராமரித்து வயலில் நடவு செய்யலாம்.

துவரையில் ஊடுபயிராக உளுந்து, பச்சைப் பயறு, தட்டைப் பயிறு மற்றும் நிலக்கடலை ஆகிய பயிர்களை விதைப்பு செய்து, பின் 5 (அ) 6 அடிக்கு ஒரு உழவு சால் ஏற்படுத்தி துவரை நடவு செய்தால் ஊடுபயிர் மூலம் உபரி வருமானம் பெறலாம். பயிரின் முக்கிய வளர்ச்சி நிலைகளான நடவு, பூக்கும் பருவம், காய்பிடிக்கும் பருவம் ஆகிய பருவங்களில், தவறாமல் 3 முதல் 4 நீர்ப்பாசனம் அளிக்க வேண்டும். மண் அணைப்பதால் களை கட்டுப்பாடும் ஏதுவாகிறது.

பயிர்களுக்கு சரியான அளவு இடைவெளி மற்றும் போதிய அளவு நீர்ப்பாசனம் அளிப்பதால் நிலம், காற்று, ஈரப்பதம் மற்றும் பயிர் சத்துக்கள் ஆகியவை சரிவிகிதத்தில் பயிருக்கு கிடைக்கும். இதனால் பயிர் மகசூல் அதிகரிக்கிறது. பக்கவாட்டு கிளைகள் அதிகளவில் உருவாவதன் மூலம் அதிக காய்கள் உற்பத்தியாகி மகசூல் அதிகரிக்கிறது. இந்த வழிமுறைகளைப் பின்பற்றி துவரை சாகுபடி செய்ய வேண்டும் என்றனர்.

## பட்டுக்கோட்டையில் 32 மி.மீ. மழை

தஞ்சாவூர் மாவட்டத்தில் அதிகபட்சமாக பட்டுக்கோட்டையில் 32 மி.மீ. மழை பெய்தது.

மாவட்டத்தில் ஒரு வாரத்துக்கு மேலாக வானில் மேக மூட்டம் காணப்பட்டாலும் மழை பெய்யவில்லை. இந்நிலையில், சில இடங்களில் நீண்ட நாள்களுக்குப் பிறகு புதன்கிழமை மழை பெய்தது. மாவட்டத்தில் வியாழக்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் பெய்த மழையளவு (மில்லிமீட்டரில்):

பட்டுக்கோட்டை 32, வெட்டிக்காடு 31.2, மதுக்கூர் 26.8, பேராவூரணி 21, ஒரத்தநாடு 12.8, ஈச்சன்விடுதி 5.2, அதிராம்பட்டினம் 3.6.

மாவட்டத்தில் பல இடங்களில் வியாழக்கிழமையும் வானில் பெரும்பாலான நேரம் மேக மூட்டம் காணப்பட்டது.

## விவசாயிகளிடம் நேரடியாக காய், கனிகள் கொள்முதல்: தனியார் நிறுவனங்களுக்கு தோட்டக்கலைத் துறை அழைப்பு

விவசாயிகளிடமிருந்து நேரடியாக காய், கனிகளை கொள்முதல் செய்ய தனியார் நிறுவனங்கள் முன்வர வேண்டும் என்று, கர்நாடக தோட்டக்கலைத் துறை அழைப்பு விடுத்துள்ளது.

பெங்களூரில் வியாழக்கிழமை தோட்டக்கலைத் துறையின் ஹாப்காம் நிறுவனத்துடன் எம்.டி.ஆர். குழுமத்தினர் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்ட பின்னர், நிகழ்ச்சியில் தோட்டக்கலைத்துறை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு, விற்பனை பதப்படுத்துதல் சங்கத்தின் (ஹாப்காம்) மேலாண் இயக்குநர் கிருஷ்ணா பேசியது:

கர்நாடகத்தின் விவசாயிகளின் நலன் காக்க அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. தோட்டக்கலைத் துறை சார்பில் செயல்படும் ஹாப்காமில் எம்.டி.ஆர். குழுமத்தினரால் தயார் செய்யப்படும் இனிப்பு உள்ளிட்ட உணவு பொருள்கள் விற்பனை செய்யப்படும்.

எம்.டி.ஆர். உணவு பொருள்கள் தயாரிப்புக்கு தேவையான காய், கனிகளை ஹாப்காம் மூலம் விவசாயிகளிடம் நேரடியாக கொள்முதல் செய்வர். இதற்காக புரிந்துணர்வு ஒப்பந்ததைச் செய்து கொண்டுள்ளோம் நாள் ஒன்றுக்கு 2 டன் காய்,

கனிகளை வாங்குவதன் மூலம் தோட்டக்கலைத் துறை விவசாயிகளுக்கு உதவியாக இருக்கும்.

இடைத்தரகர்கள் இல்லாமல் விவசாயிகளிடம் நேரடியாக கொள்முதல் செய்ய தேவையான உதவிகளை ஹாப்காம் செய்யும். எம்.டி.ஆர். குழுமத்தை போல காய், கனிகளை கொள்முதல் செய்ய மற்ற குழுமங்கள், நிறுவனங்கள் முன்வர வேண்டும். கர்நாடகத்தில் விவசாயிகள் நலன் காக்க தேவையான நடவடிக்கைகளை தோட்டக்கலைத் துறை மேற்கொள்ளும் என்றார்.

நிகழ்ச்சியில் எம்.டி.ஆர். குழுமத்தின் தலைமை மேலாண் அதிகாரி சுனேபாஷின், தலைமை செயல் அதிகாரி அனைகர் பாமிக், ஹாப்காம் தலைவர் சீனிவாசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## அதிக மகசூலுக்கு திருந்திய நெல் சாகுபடி

தாமிரவருணி பாசனத்தில் திருந்திய நெல் சாகுபடி முறையை பின்பற்றி பாசனம் செய்யுமாறு வேளாண்துறை வேண்டுகோள் விடுத்துள்ளது.

அம்பாசமுத்திரம் வட்டார வேளாண் உதவி இயக்குநர் தி.சு. பாலசுப்பிரமணியன் வெளியிட்ட செய்திக் குறிப்பு: பண்டை காலத்தில் நெல் சாகுபடியில் விவசாயிகள் உயர் மகசூல் பெற்று வந்தனர். அத்தகைய உயர்ந்த மகசூலைப் பெறும் வகையில் விவசாயிகள் திருந்திய நெல் சாகுபடி முறையை பின்பற்றி அதிக மகசூல் பெறலாம்.

தரமான விதை: நெல் சாகுபடியில் சான்று பெற்ற உயர் விளைச்சல் மற்றும் வீரிய ஒட்டு இரக விதைகளை பயன்படுத்த வேண்டும். ஒரு ஏக்கருக்கு மூன்று கிலோ வீதம் விதை போதுமானது. இதனால் விதைக்கான செலவு வெகுவாகக் குறைகிறது.

ஒரு ஏக்கர் நடவு செய்ய ஒரு சென்ட் அதாவது 40 சதுர மீட்டர் பரப்பளவில் மேட்டுப்பாத்தி நாற்றங்கால் அமைக்க வேண்டும். இயந்திர நடவு மேற்கொள்ள, பாய்களிலோ, டிரேக்களிலோ நாற்றுகளை விட வேண்டும்.

நாற்றின் வயது: 10 முதல் 14 நாள் வயதுடைய இளம் நாற்றுக்களை, நன்கு சமன் செய்த வயலில் நடவு செய்தல் வேண்டும். ஒரு குத்துக்கு ஒரு நாற்று வீதம் ஒற்றைக் குத்து முறையில் மட்டுமே நடவு செய்ய வேண்டும்.

சதுர நடவு: வரிசைக்கு வரிசை முக்கால் அடி அதாவது (22.5 செ.மீ), குத்துக்குக் குத்து முக்கால் அடி (22.5 செ.மீ), என்ற இடைவெளியில் சதுர நடவு மேற்கொள்ள வேண்டும். சதுர நடவுக்கு அடையாளம் இட மார்க்கர் கருவியைப் பயன்படுத்த வேண்டும்.

வேளாண் திட்டம்: நடவு இயந்திரம் மூலம் நெல் நடவு மேற்கொள்ளலாம். தமிழக அரசு விவசாயிகளிடையே இயந்திர நடவு முறையை ஊக்குவிக்கும் வகையில், நடவுக்குப் பிந்தைய மானியமாக ஹெக்டேருக்கு ரூ. 5 ஆயிரம், அதாவது ஒரு ஏக்கருக்கு ரூ. 2 ஆயிரம் மானியமாக வழங்குகிறது. ஆர்வமுள்ள விவசாயிகள் இயந்திர நடவு மேற்கொண்டு, அரசு வழங்கும் மானிய உதவியை வேளாண் துறையின் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

நீர்ப்பாசனம்: நீர் மறைய நீர் கட்டு, நிறைய வரும் நெல்கட்டு என்ற அனுபவ மொழிக்கு ஏற்ப ஒரு விரற்கடை அளவுக்கு, அதாவது 2.5 செ. மீ அளவுக்கு மட்டுமே நீர் நிறுத்தி, நீர் மறைய நீர் கட்ட வேண்டும். நடவு செய்த பின் 10 தினங்களுக்கு ஒரு முறை கோனோவீடர் (அல்லது) விசை களைக் கருவியைக்கொண்டு நான்கு முறை குறுக்கும் நெடுக்குமாக ஓட்டி, களையினை மண்ணுக்குள் மடக்கி உரமாக்க வேண்டும்.

வேண்டுகோள்: அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்ற பழமொழிக்கு ஏற்ப இலை வண்ண அட்டையை உபயோகித்து, இலை நிறத்துடன் ஒப்பிட்டுப் பார்த்து, நிறச்செறிவு 4 இருக்குமாறும், தேவைக்கேற்ப தழைச்சத்து இட்டு உர நிர்வாகம் செய்திட வேண்டும். நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் திருந்திய நெல் சாகுபடி முறையை பின்பற்றி உயர் மகசூல் மூலம் உன்னத இலாபமும் பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கோதையாறு இடதுகரைக் கால்வாயில் தூர்வாரும் பணி தொடக்கம்

கோதையாறு இடதுகரைக் கால்வாயில் தூர்வாரும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

குமரி மாவட்டத்தில் ஆண்டுதோறும் ஜூன் மாதத்திற்கு முன்பாக கால்வாய்களில் தூர் வாரும் பணிகள் நடத்தப்படுவது வழக்கம். நிகழாண்டு மே மாதத்தில் தேர்தல் நடைபெற்றதால் தூர்வாரும் பணியில் தொய்வு ஏற்பட்டது.

இந்நிலையில், பேச்சிப்பாறை அணையிலிருந்து தொடங்கும் கோதையாறு இடதுகரைக் கால்வாயில் தூர்வாரும் பணிகளை பொதுப்பணித்துறையினர் தொடங்கியுள்ளனர்.

மக்கள் புகார்: இதனிடையே, "காய்வாய் தூர்வாரும் பணிகள் முழுமையாக மேற்கொள்ளப்படவில்லை; கரையோரங்கள் சீரமைக்கப்படவில்லை; கால்வாயின் மையப்பகுதிகளில் குவிந்துள்ள பாறைகற்கள் அகற்றப்படவில்லை என மக்கள் குறை கூறி வருகின்றனர். திற்பரப்பு பேரூராட்சி வார்டு உறுப்பினர் எம். சசிகுமார் கூறுகையில், தூர்வாரும் பணிகள் கண்துடைப்புக்காகவே நடைபெற்று வருகின்றன; திருநந்திக்கரை உள்ளிட்ட இடங்களில் பொதுமக்கள் கால்வாய் கரைகளில் நடவு செய்திருந்த காய்கனி பயிர்கள் வெட்டி அழிக்கப்பட்டுள்ளன என கவலை தெரிவித்தார்.

ஆக்கிரமிப்புக்கு இடமில்லை: இதுகுறித்து பொதுப்பணித்துறை நீராதாரப்பிரிவு செயற்பொறியாளர் சுப்பிரமணி கூறியதாவது:

குமரி மாவட்டத்தில் பாசனத்திற்காக தற்போது பெருஞ்சாணி அணையிலிருந்து தண்ணீர் செல்கிறது. இந்நிலையில் கோதையாறு இடதுகரைக் கால்வாயில் தூர் அகற்றும் பணிகள் நடைபெறுகிறது. 16 கி.மீ. தொலைவு கொண்ட இக்கால்வாயில் 4 கட்டங்களாக பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. கால்வாய் கரைகளில் ஆக்கிரமிப்புகளை அனுமதிக்க முடியாது. மக்கள் கால்வாயின் கரையில் காய்கறி தோட்டங்கள் மற்றும் வாழைகளை நடக்கூடாது.

கரைகளை ஆக்கிரமித்து வீடுகள் கட்டக்கூடாது என்ற விதிகளை மக்கள் பின்பற்ற வேண்டும், கால்வாய்களில் பெயர்ந்து கிடக்கும் கரைகளை சீரமைக்க கூடுதலான நிதி தேவைப்படுகிறது. இதற்கான கருத்துரு அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றார்.

## ரப்பர் விலை கிலோ ரூ. 106.50 ஆக குறைவு: உற்பத்தியாளர்கள் பாதிப்பு

ரப்பர் விலையில் தொடர்ந்து நிரந்தரமற்ற நிலை ஏற்பட்டு வருவதால் உற்பத்தியாளர்கள், வணிகர்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

கடந்த இரு ஆண்டுகளாக ரப்பர் விலை தொடர்ந்து சரிவடைந்து வருகிறது. அதே வேளையில் விலையில் நிரந்தரமற்ற நிலையும் நீடிக்கிறது. இதனால் குமரி மாவட்டத்தில் ரப்பர் உற்பத்தியாளர்கள் மற்றும் வணிகர்கள் கடும் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றனர். குறிப்பாக விலை சிறிது உயர்ந்தவுடன்

உற்பத்தியாளர்கள் ரப்பரை இருப்பு வைக்கின்றனர். அதேவேளையில் விலை திடீரென சரிந்து அவர்களை இழப்புக்குள்ளாக்கிவருகிறது.

கடந்த வாரம் கிலோ ரூ. 116.50 என இருந்த ரப்பர் விலை, இரு நாள்களாக பெரும் சரிவு ஏற்பட்டது. வியாழக்கிழமை மட்டும் கிலோவுக்கு ரூ. 5 குறைந்து ரூ. 106.50 ஆக இருந்தது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

### தாமரைப்பூ சீசன்

காய்கறி, பழங்களுக்கு சீசன் இருப்பது போல பூக்களில் தாமரைப்பூ சீசன் ஆனி மாதம் நெலும்போ நுசிபெரோஎன்பது தாமரையின் தாவரவியல் பெயர் நீர்வாழ் பல்லாண்டு தாவரமான தாமரையில் வெண்தாமரை, செந்தாமரை என இரு வகைகள் உள்ளன.வெண்தாமரை மூளைத் திறனை மேம்படுத்தும் எனவே தான் இந்துசமய புராணத்தில் அறிவுக்கடவுளான சரஸ்வதி வெண்தாமரையில் வீற்றிருப்பதாக சித்தரிக்கின்றனர். இதய நோயை குணப்படுத்தும் ஆற்றலும் வெண்தாமரைக்கு உள்ளது. கண்களைக் கூர்மையாக்கும் திறனும் தாமரைப்பூவிற்கு உள்ளது.

### வேளாண் விழிப்புணர்வு நிகழ்ச்சி

சிங்கப்பெருமாள் கோவில்:சிங்கப்பெருமாள் கோவில் பகுதியில், பிரதமர் பயிர்க் காப்பீட்டு திட்டம் பற்றிய விழிப்புணர்வு முகாம் நடந்தது. காஞ்சிபுரம் மாவட்டம், சிங்கப்பெருமாள் கோவிலில், பிரதமரின் பயிர்க் காப்பீட்டு திட்டம் பற்றிய விழிப்புணர்வு முகாம் மற்றும் விவசாயக் கண்காட்சி, நேற்று காலை நடந்தது.தமிழக கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், இந்திய வேளாண் ஆராய்ச்சி குழுமம் மற்றும் வேளாண்மை அறிவியல் நிறுவனம் சார்பில், இவ்விழா நடந்தது.

**விலை உயரும் போது மட்டும் வரத்து அதிகரிப்பு: மஞ்சள் இருப்பு வைத்தால் லாபம் பெறலாம்**

ஈரோடு: "விலை உயரும்போது மட்டும் மஞ்சள் வரத்து அதிகரிக்கிறது. வரத்து அதிகரித்ததும் உடனடியாக விலை சரிவு ஏற்பட்டு, மீண்டும் சீரான விலையை அடைகிறது," என இந்திய மஞ்சள் விவசாயிகள் சங்க தலைவர் தெய்வசிகாமணி தெரிவித்தார்.

ஈரோடு மாவட்டத்தில், பெருந்துறை மற்றும் ஈரோடு ஒழுங்குமுறை விற்பனை கூடம், ஈரோடு மற்றும் கோபி சொசைட்டி என, நான்கு இடங்களில் அதிக அளவில் மஞ்சள் விற்பனை நடக்கிறது. சனி, ஞாயிறு தவிர தினமும், பல லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் வர்த்தகம் நடக்கிறது. கடந்த நான்கு மாதங்களாக, 7,500 முதல், 9,500 ரூபாய்க்குள் மஞ்சள் விலை போகிறது.

இதுபற்றி, இந்திய மஞ்சள் விவசாயிகள் சங்க தலைவர் தெய்வசிகாமணி கூறியதாவது: உற்பத்தி மற்றும் தேவையும் சமமாக உள்ளதால், விலையும் சீரான நிலையில் உள்ளது. இதனால், விவசாயிகளும், வியாபாரிகளும் பெரிய லாபமும், பெரிய நஷ்டமும் அடைவதில்லை. மஞ்சள் விலை, குவிண்டால், 9,000 ரூபாய்க்கு மேல் விற்கும்போது, இருப்பு வைத்துள்ள மஞ்சளை விவசாயிகளும், வியாபாரிகளும் விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். உடன், 9,500 ரூபாயை அடைகிறது. நல்ல விலை கிடைப்பதால் வரத்து அதிகரித்ததும், மீண்டும் விலை சரிகிறது. இதனால், நேற்று முன்தினம் பெருந்துறை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், குவிண்டால், விரலி - 7,389 முதல், 9,009, கிழங்கு - 7,211 முதல், 8,469 ரூபாய்க்கும், ஈரோடு ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் விரலி, 7,354 முதல், 9,100 ரூபாயும், கிழங்கு - 7,299 முதல், 8,410 ரூபாய்க்கும், ஈரோடு சொசைட்டியில் விரலி, 7,711 முதல், 9,011 ரூபாய்க்கும், கிழங்கு - 7,421 ணுமுதல், 8,399 ரூபாய்க்கும் விலை போனது. மகராஷ்டிரா, நிஜாமாபாத், சாங்ளி மற்றும் தமிழகத்திலும் ஒரே விலை நீடிப்பதால், பிற மாநில வியாபாரிகள் இங்கு வந்து மஞ்சளை எடுத்து செல்வதில்லை. மொத்த தேவைக்கு மட்டும் வாங்கி செல்கின்றனர்.

கடந்தாண்டு நல்ல மழை பெய்ததால், அதிக அளவில் தமிழகத்தில் மஞ்சள் சாகுபடியாகி, இருப்பில் அதிகமாக மஞ்சள் உள்ளது. தற்போது நடவுப்பணி நடந்து வருகிறது. ஜுலை இறுதி வரை, நடவு நடக்கும். பருவமழை ஏமாற்றினாலும், நிலத்தடி நீர் கைகொடுக்கிறது. பருவமழை பெய்து, அதிகமாக மஞ்சள் வரத்தானால் விலை குறையும். அல்லது, இன்னும் ஒரு மாதத்துக்குப்பின் மஞ்சள் விலை உயர வாய்ப்புள்ளது. பிற மாநிலங்களில் தொடர் வறட்சி நிலவுவதால், மஞ்சள் சாகுபடி பரப்பு தொடர்ந்து குறைந்து வருவதால், தமிழக மஞ்சள் விவசாயிகளுக்கு வரும் மாதங்களில் நல்ல விலை கிடைக்க வாய்ப்புள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**மல்லிகை, கனகாம்பரம் பூ விலை உயர்வு**

திண்டுக்கல், திண்டுக்கல்லில் நேற்று ரமலான் பண்டிகையையொட்டி மல்லிகை, கனகாம்பரம் பூ இரு மடங்கு விலை அதிகரித்து விற்பனையானது. திண்டுக்கல்லில் மல்லிகை 961 எக்டேரிலும், கனகாம்பரம் 400 எக்டேரிலும் சாகுபடியாகிறது. இங்கிருந்து மல்லிகை, கனகாம்பரம், காக்கரட்டான், முல்லை, ரோஜா பூக்கள் மதுரை, நெல்லை, கன்னியாகுமரி, திருச்சி, சேலம் உள்ளிட்ட மாவட்டங்களுக்கு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது.

திண்டுக்கல் மார்க்கெட்டிற்கு நாள்தோறும் மல்லிகை, கனகாம்பரம் 400 கிலோ வரை விற்பனைக்கு வரும். சில இடங்களில் பெய்யும் மழை, பலத்த காற்று வீசி வருவதால் மல்லிகை, கனகாம்பரம் பூக்களின் வரத்து பெரியளவில் இல்லை. இதனால் ஒரு கிலோ மல்லிகை ரூ.250 முதல் ரூ.300 வரை விற்றது. கனகாம்பரம் ஒரு கிலோ ரூ.150 முதல் ரூ.200 க்கும் விற்றது. நேற்று ரமலான் பண்டிகையையொட்டி வரத்து குறைந்ததால் இவற்றின் விலை இருமடங்கு அதிகரித்து விற்பனையானது.

நேற்று மல்லிகை ரூ.200 அதிகரித்து, ரூ.500 க்கு விற்றது. இதே போல், கனகாம்பரம் ஒரு கிலோவுக்கு ரூ.200 அதிகரித்து, ரூ.400 ஆக விற்றது. மற்ற

பூக்களான ரோஜா ரூ.80, முல்லை ரூ.120, அரளி ரூ.100, பிச்சி ரூ.90, சம்பங்கி ரூ.70 க்கு விற்றது.

வியாபாரி ஒருவர் கூறுகையில்,'மல்லிகை, கனகாம்பரம் போதுமான வரத்து இல்லை. நேற்று ரமலான் பண்டிகை என்பதால் கூடுதல் விலைக்கு விற்பனையானது' என்றார்.---------

## வரத்து குறைந்த அவக்கோடா சீதோஷ்ண நிலை காரணம்

தாண்டிக்குடி, தாண்டிக்குடி கீழ்மலைப்பகுதியில் சீதோஷ்ண நிலை பாதிப்பால் நடப்பாண்டில் அவக்கோடா வரத்து குறைந்துள்ளது. ஊடு பயிராக பயிரிடப்படுவதால், காபி விவசாயிகளின் பொருளாதார மேம்பாட்டில் முக்கிய பங்கு வகிப்பது அவக்கோடா. நடப்பாண்டில் துவக்கம் முதலே மழை குறைவு, சுட்டெரிக்கும் வெயில் என வறண்ட வானிலை நீடித்து வந்தது. இதற்கிடையே கடந்த சில வாரங்களாக வீசிய சூறைக்காற்றுக்கு அவக்கோடா காய்கள் உதிர்ந்தன.

கோடை காலத்தில் பறிக்கப்பட்ட காய்கள் ரூ.நுாறுக்கு விற்றபோதிலும் தற்போது கிலோ ரூ.60 க்கு விற்பனையாகிறது. வெண்ணெய் பழம் என்றழைக்கப்படும் அவக்கோடா வை பயன்படுத்தி பேசியல் கீரிம், ஐஸ்கிரீம் தயாரிக்கப்படுகிறது. கேரளா, பெங்களூரு, டெல்லி மார்க்கெட் களுக்கு காய்கள் விற்பனைக்கு செல்கின்றன.

விவசாயிகள் கூறுகையில், “கடந்தாண்டை ஒப்பிடுகையில் நடப்பாண்டில் விளைச்சல் பாதியாக உள்ளது. விலை அதிகரித்தால் மட்டுமே தப்பும் நிலை உள்ளது. ஏராளமான மரங்கள் காய்ந்தும், நோய் பாதித்துள்ளதாக கூறினர்.

## விலை குறையாத முருங்கைக்காய்

ஒட்டன்சத்திரம், ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டிற்கு கொண்டு வரப்படும் முருங்கைக்காயை, வடமாநில வியாபாரிகள் வாங்கிச் செல்வதால் விலை குறையாமல் உள்ளது.

அம்பிளிக்கை, அத்திக்கோம்பை, சாலைப்புதுார், காவேரியம்மாபட்டி, கள்ளிமந்தையம், மார்க்கம்பட்டி, தாராபுரம், மூலனுார் பகுதிகளில் விளைந்த செடி முருங்கைக்காய் ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டிற்கு விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது.

இவற்றில் அதிகளவில் முருங்கை கேரளாவிற்கு கொண்டு செல்லப்படுகிறது. கடந்த சில நாட்களுக்கு முன்பு வரத்து குறைவாக இருந்ததால் அதிகபட்சமாக கிலோ ரூ.92 வரை விற்றது. இந்நிலையில் வரத்து அதிகரித்ததை தொடர்ந்து ஏறிய வேகத்தில் இதன் விலை சறுக்கியது. ஒரு கட்டத்தில் ஒரு கிலோ ரூ.22 வரை குறைந்த நிலையில், மகாராஷ்டிரா உள்ளிட்ட வட மாநில வியாபாரிகள் முருங்கையை கொள்முதல் செய்தனர். இதனால் சரிவிலிருந்து மீண்ட முருங்கைக்காய் கிலோ ரூ.20க்கும் மேல் பல நாட்களாக விற்கிறது. நேற்று கிலோ ரூ.24க்கு விற்றது. கமிஷன் கடை உரிமையாளர் ஹரிகரன் கூறுகையில்,“ வடமாநில வியாபாரிகள் வாங்காமல் இருந்திருந்தால், முருங்கை கிலோ ரூ.20க்கும் குறைந்திருக்கும்,” என்றார்.

## திருந்திய நெல் சாகுபடிக்கு எக்டேருக்கு ரூ. 5 ஆயிரம் மானியம்: வேளாண் அதிகாரி தகவல்

உத்தமபாளையம், “திருந்திய நெல் சாகுபடி முறையில் செயல்விளக்கத் திடல் அமைக்கும் விவசாயிகளுக்கு எக்டேருக்கு ரூ. 5 ஆயிரம் மானியம் வழங்கப்படும்,” என, உத்தமபாளையம் வேளாண் அலுவலர் பாண்டி தெரிவித்துள்ளார். அவர் கூறியதாவது:

கம்பம் பள்ளத்தாக்கில் முதல் போக நெல் சாகுபடிக்கான பணிகள் துவங்கியுள்ளது. இயந்திர நடவு மூலம் திருந்திய நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு எக்டேருக்கு ரூ. 5 ஆயிரம் மானியம் வழங்கப்படும். மேலும் விதையை நேர்த்தி செய்து விதைப்பு செய்ய வேண்டும். 400 கிராம் அசோஸ்ஸ்பைரில்லத்துடன் 400 கிராம் பாஸ்போபாக்டீரியா உயிர் உரத்தை ஒரு ஏக்கருக்கான விதையில் கலந்து விதைப்பு செய்ய வேண்டும். ஒரு கிலோ விதையும் 4 கிராம் சூடோமோனஸ் அல்லது கார்பன்டாசிம் 2 கிராம் வீதம் கலந்து நேர்த்தி செய்யலாம். பருவமழை தாமதமாகி வருவதால் நடவுப்பணி தாமதமாகி வருவதை சரிக்கட்ட மேட்டுப்பாத்தி அல்லது பாய் நாற்றாங்கால் அல்லது தட்டுக்களில் நாற்றாங்கால்

வளர்க்கலாம்.

14 நாள் வயதுடைய நாற்றுக்களை 25 க்கு 25 செ.மீ., இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். அவ்வாறு செய்வதால் நல்ல காற்றோட்டம் கிடைக்கும். அதிக துார் உருவாகும். சிக்கனமாக நீரை பயன்படுத்தி 10 நாள் இடைவெளியில் 4 முறை 'கோனா' களையெடுக்கும் கருவி மூலம் களை நிர்வாகம் செய்தால், சாகுபடி செலவு குறைவாகவும், 30 சதவீத மகசூல் அதிகமாகவும் கிடைக்கும். உத்தமபாளையம் வேளாண் அலுவலகத்தில் கோ 51 ரக விதைகள் இருப்பு உள்ளது. விவசாயிகள் வாங்கி பயன்படுத்திக் கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள், என்றார்.

## கொடைக்கானல் பேரிக்காய் விற்பனை தர்மபுரியில் ஜோர்

தர்மபுரி: தர்மபுரியில் விற்கப்படும் கொடைக்கானல் பேரிக்காய்க்கு, பொதுமக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு ஏற்பட்டுள்ளதால், விற்பனை களை கட்டி வருகிறது.

தமிழகத்தில் கொடைக்கானல், ஊட்டி, ஏற்காடு உள்ளிட்ட மலைப்பகுதிகளில் பேரிக்காய் சாகுபடி செய்யப்படுகிறது. இதில் கொடைக்கானலில் விளையும் பேரிக்காய் மற்றும் வால்பேரிக்காய் சுவை மிக்கதாக உள்ளதால், தென்மாவட்டங்கள் மட்டுமன்றி, தர்மபுரி உட்பட வடமாவட்டங்களிலும் இதற்கு வரவேற்பு ஏற்பட்டுள்ளது. தற்போது கொடைக்கானலில் பேரிக்காய் சீசன் தொடங்கியுள்ளதை அடுத்து, கடந்த சில நாட்களாக தர்மபுரிக்கு கொடைக்கானல் பேரிக்காய் வரத்து தொடங்கியுள்ளதால் பொதுமக்கள் ஆர்வத்துடன், பேரிக்காய்களை வாங்கி செல்கின்றனர்.

இதுகுறித்து, பேரிக்காய் வியாபாரிகள் கூறியதாவது: கொடைக்கானலில் விளையும் பேரிக்காய்க்கு சுவை அதிகமாக உள்ளது. இதனால், தர்மபுரி மாவட்டத்தை சேர்ந்த வியாபாரிகள், கொடை ரோட்டில் உள்ள பேரிக்காய் மொத்த வியாபாரிகள் மூலம், தர்மபுரிக்கு கொடைக்கானல் பேரிக்காய்களை விற்பனைக்கு வாங்கி வருகின்றனர். தர்மபுரியில் கொடைக்கானல் பேரிக்காய், ஒரு கிலோ, 40 ரூபாய் முதல், 50 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. இன்னும் சில தினங்களில் கொடைக்கானல் வால்பேரியும் விற்பனைக்கு வரவுள்ளது. இது தற்போது விற்கும் பேரிக்காயைவிட சுவை மிக்கதாக இருக்கும். இவ்வாறு கூறினர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### தக்காளி விலையை தொடர்ந்து குண்டு மிளகாய் விலை கடும் உயர்வு




சென்னை: தக்காளி விலையை தொடர்ந்து, தற்போது குண்டு மிளகாய் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. கிலோவுக்கு 40 வரை அதிகரித்துள்ளதால் இல்லத்தரசிகள் பெரும் கவலையடைந்துள்ளனர். அதிகம் ருசியாகவும், காரமாகவும் இருப்பதால் பிரியாணி மற்றும் மீன் குழம்பு, மட்டன், சிக்கன் உள்ளிட்ட அசைவ குழம்புகளுக்கு பெரும்பாலும் குண்டுமிளகாய் பயன்படுத்துவது அதிகமாக உள்ளது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கு பரமக்குடி, விளாத்திக்குளம், ராமநாதபுரம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து விற்பனைக்காக குண்டுமிளகாய் கொண்டுவரப்படுகிறது. இங்கு சரியான மழை இல்லாததால் விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டு வரத்து அடியோடு குறைந்துள்ளது. இதன் காரணமாக குண்டு மிளகாய் விலை ெதாடர்ந்து உயர்ந்த வண்ணம் உள்ளதாக கூறப்படுகிறது. கடந்த மாதம் 1 கிலோ குண்டு மிளகாய் 190 விற்றது. இது கிலோவுக்கு 40 உயர்ந்து ஒரு கிலோ 230க்கு தற்போது விற்கப்பட்டு வருகிறது. குண்டுமிளகாய் (2ம் ரகம்) 150லிருந்து 185 ஆக விலை உயர்ந்துள்ளது.

இந்த விலை உயர்வு குறித்து, தமிழ்நாடு அனைத்து மளிகை வியாபாரிகள் சங்க தலைவர் எஸ்.பி.சொரூபன் கூறியதாவது: விளைச்சல் பாதிப்பால் குண்டுமிளகாய் விலை அதிகரித்துள்ளது. ஆந்திரா, கர்நாடகாவில் இருந்து நீண்ட மிளகாய் அதிக அளவில் வந்து கொண்டிருக்கிறது. இதனால், குண்டு மிளகாய் விலை சற்று கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. நீண்ட மிளகாய் வந்திருக்கவில்லை என்றால் குண்டு மிளகாய் கிலோவுக்கு 300 வரை உயர்ந்திருக்கும். ஆந்திரா, கர்நாடகாவில் இருந்து வரத்து அதிகரிப்பால் நீண்ட மிளகாய் கிலோ 180லிருந்து 150 ஆக குறைந்துள்ளது. மேலும் மத்திய அரசு தான்சானியா, கென்யா, மாளவியா, பர்மா போன்ற நாடுகளில் சுமார் 10 லட்சம் டன் வரை பருப்பை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கியுள்ளது. இதனால் இந்தியாவில் பருப்பை பதுக்கி வைத்திருந்த விவசாயிகள், தரகர்கள் தாங்கள் ஸ்டாக் வைத்திருந்த லட்சக்கணக்கான டன் பருப்பை விற்பனைக்கு கொண்டு வர தொடங்கியுள்ளனர்.

இதனால், தற்போது பருப்பு விலை குறைய தொடங்கியுள்ளது. துவரம் பருப்பு கிலோ 170லிருந்து 140, துவரம் பருப்பு(2ம் ரகம்) 150லிருந்து 120, தான்சானியா துவரம் பருப்பு 120லிருந்து 90, உளுத்தம் பருப்பு 180லிருந்து 160, பர்மா உளுத்தம் பருப்பு 160லிருந்து 140, பாசிப்பருப்பு 120லிருந்து 90 ஆக விலை குறைந்துள்ளது. இதே போல ராஜஸ்தான், மத்திய பிரதேசத்தில் இருந்து வரத்து அதிகரிப்பால் கொத்தமல்லி 150லிருந்து 120, ெகாத்தமல்லி (2ம் ரகம்) 130லிருந்து 100 ஆக குறைந்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

பூண்டு விலை எகிறியது

குஜராத், மத்திய பிரதேசத்தில் அதிக அளவில் நாட்டு பூண்டு விளைவிக்கப்படுகிறது. இங்கிருந்து வரத்து குறைந்துள்ளதால் நாட்டு பூண்டு விலை உயர தொடங்கியுள்ளது. கிலோ 100 லிருந்து 140 ஆக நாட்டுப்பூண்டு விலை உயர்ந்துள்ளது. நாட்டுப்பூண்டு (2ம் ரகம்) 70லிருந்து 100 ஆகவும் விலை அதிகரித்துள்ளது. சீனாவில் இருந்து இறக்குமதி இல்லாததால் மலைப்பூண்டு 120

லிருந்து 150 ஆகவும் விலை உயர்ந்துள்ளதாக மளிகை வியாபாரிகள் தெரிவித்தனர்.

**பருவ மழையால் ஏரிகளுக்கு நீர்வரத்து**

தர்மபுரி : தர்மபுரி மாவட்டத்தில் பொதுப்பணித்துறைக்குட்பட்ட 74 ஏரிகள் உள்பட 930 ஏரிகள் உள்ளன. நடப்பாண்டில் கோடை மழையை அடுத்து தென்மேற்கு பருவமழையும் பரவலாக பெய்து வருகிறது. தர்மபுரி டவுனை அடுத்து கிருஷ்ணகிரி செல்லும் பிரதான சாலையில் ராமாக்காள் ஏரி உள்ளது. சுமார் 265 ஏக்கர் பரப்பளவுள்ள இந்த ஏரியில் 90 ஹெக்டேர் அளவிற்கு தண்ணீர் தேக்கி வைக்க முடியும். இதன் மூலம் மதிகோண்பாளையம், செட்டிக்கரை பகுதியை சேர்ந்த 400 ஏக்கர் பரப்பளவிலான விவசாய நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன. ராமாக்காள் ஏரி பருவமழை காரணமாக நிரம்பி தற்போது வருகிறது. இதே போல் மாவட்டத்தின் பல பகுதிகளில் உள்ள ஏரிகளுக்கும் குறைந்தளவில் நீர் வரத்து ஏற்பட்டுள்ளது.

**தர்மபுரியில் கத்தரிக்காய் விளைச்சல் குறைவு கிலோ ரூ.20க்கு விற்பனை**

தர்மபுரி : தர்மபுரி மாவட்டத்தில் கடந்த மாதம் ரூ.8க்கு விற்பனையான கத்தரிக்காய் நேற்று கிலோ ரூ.20க்கு விற்பனை செய்யப்பட்டது. தர்மபுரி மாவட்டத்தில் தக்காளிக்கு அடுத்தபடியாக பல ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் கத்தரிக்காய் விளைவிக்கப்படுகிறது. தர்மபுரி, பென்னாகரம், சோகத்தூர் பகுதியில் சுமார் 2 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கத்தரிக்காய் சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர். நடப்பாண்டில் பருவ மழை கைகொடுத்ததால் கத்தரி விளைச்சல் அதிகரித்துள்ளது.

இதையொட்டி தர்மபுரியில் கடந்த மாதம் கிலோ ரூ.8க்கு விற்பனையானது. இந்நிலையில் கடந்த சில நாட்களாக வரத்து குறைந்ததையடுத்து நேற்று கத்தரிக்காய் கிலோ ரூ.20க்கு விற்பனை செய்யப்பட்டது. இது குறித்து வியாபாரிகள் கூறும் போது, தற்போது கத்தரிக்காய் விளைச்சல் வெகுவாக குறைந்துவிட்டது. பெங்களூர், ஓசூர் பகுதியில் இருந்து வரும் கத்தரிக்காய் தற்போது விற்பனைக்கு வருவ தில்லை. இதனால் சில்லரை விலையில் ஒரு கிலோ ரூ.20க்கு விற்பனை செய்து வருகிறோம் என்றனர்.

## சேலம் லீ பஜாரில் 1300 மஞ்சள் மூட்டை ரூ.45 லட்சத்திற்கு ஏலம்

சேலம் : சேலம் லீ பஜார் மஞ்சள் மண்டியில் நடந்த ஏலத்தில் 1300 மஞ்சள் மூட்டை ரூ.45 லட்சத்திற்கு ஏலம் போனது. நேற்று நடந்த ஏலத்தில் மூட்டை ரூ.200 அதிகமாக ஏலம் போனதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். சேலம் லீ பஜாரில் வாரந்தோறும் புதன்கிழமை மஞ்சள் ஏலம் நடைபெறும். ரம்ஜான் பண்டிகையையொட்டி நேற்றுமுன்தினம் நடைபெறுவதாக இருந்த மஞ்சள் ஏலம், நேற்று நடந்தது. இங்கு நடக்கும் மஞ்சள் ஏலத்திற்கு சேலம், தர்மபுரி, அரூர், ஆத்தூர், சின்னசேலம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து விவசாயிகள் மஞ்சளை அறுவடை செய்து, விற்பனைக்கு கொண்டு வருகின்றனர்.

இங்கு விற்பனைக்கு வரும் மஞ்சளை ஏலம் எடுக்க சேலம், ஈரோடு, கோவை, சென்னையை சேர்ந்த மஞ்சள் வியாபாரிகள் வருகின்றனர். தமிழக முழுவதும் தற்போது மஞ்சள் விளைச்சல் குறைந்துள்ளது. அறுவடை செய்யப்பட்ட மஞ்சளும், மாறுப்பட்ட சீதோஷ்ண நிலையில் காயாமல் உள்ளன. இதன் காரணமாக சேலம் லீ பஜார் மஞ்சள் மார்க்கெட்டுக்கு வழக்கமாக வரவேண்டிய, மஞ்சள்25 சதவீதம் வரத்து குறைந்துள்ளது.

இது குறித்து சேலம் லீ பஜார் மஞ்சள் வியாபாரிகள் கூறுகையில்,'' சேலம் லீ பஜார் மஞ்சள் மார்க்கெட்டிற்கு வழக்கமாக 2 ஆயிரம் மூட்டை மஞ்சள் வரத்து இருக்கும். நேற்று 1300 மூட்டை தான் ஏலத்திற்கு வந்தது. தற்போது வெயில் இல்லாத காரணத்தால், மஞ்சள் காயாமல் உள்ளன. இதன் காரணமாக மஞ்சள் வரத்து குறைந்துள்ளது.

மஞ்சள் வரத்து சரிவால், மூட்டைக்கு ரூ.200 அதிகரித்து இருந்தது. இதனால் விவசாயிகள் ஓரளவிற்கு லாபம் கிடைத்துள்ளது. நேற்று நடந்த ஏலத்தில் வரலி மஞ்சள் ரூ.8450 முதல் ரூ.10450 எனவும், குண்டு மஞ்சள் ரூ.8200 முதல் 9100 வரை ஏலம் போனது. 1300 மஞ்சள் மூட்டைகள் ரூ.45 லட்சத்திற்கு ஏலம் போனது,'' என்றனர்.

## வட மாநிலங்களில் விளைச்சல் குறைவால் பூண்டு விலை உயர்வு

சேலம் : வட மாநிலங்களில் பூண்டு விளைச்சல் குறைந்ததால், சேலம் மார்க்கெட்டுக்கு வரத்து சரிந்துள்ளது. இதன் காரணமாக ஒரு கிலோ பூண்டு ரூ.140 முதல் ரூ.160 என விற்பனை செய்யப்படுகிறது. இந்தியாவில் மகாராஷ்டிரா, குஜராத், உத்தரபிரதேசம், மத்திய பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் பூண்டு அதிகளவில் சாகுபடி செய்யப்படுகின்றன. இங்கு அறுவடை செய்யப்படும் பூண்டு இந்தியா முழுவதும் விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. கடந்த சில மாதமாக வட மாநிலங்களில் மழை இல்லாததால் பூண்டு விளைச்சல் குறைந்துள்ளது. இதன் காரணமாக சேலம் மார்க்கெட்டுக்கு பூண்டு வரத்து சரிந்து, விலை உயர்ந்துள்ளது.

இது குறித்து சேலம் பூண்டு வியாபாரிகள் கூறுகையில்,'' கடந்த மாதம் வரை பூண்டு வரத்து ஒரளவிற்கு இருந்தது. வட மாநிலங்களில் விளைச்சல் குறைந்ததால், வரத்து சரிந்துள்ளது. இதனால் ஒன்றரை மாதத்திற்கு முன்பு (சில்லரை விலையில்) ரூ.80 முதல் ரூ.100 விற்ற ஒரு கிலோ பூண்டு, நேற்று நிலவரப்படி ரூ.140 முதல் ரூ.160 என விற்பனை செய்யப்பட்டது,'' என்றனர்.

## வரத்து அதிகரிப்பால் கேரளா அனுப்பப்படும் தக்காளி

பொள்ளாச்சி, : பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு தக்காளி வரத்து அதிகரிப்பால், இங்கிருந்து கேரள மாநில பகுதிக்கு, அதிகளவு அனுப்பி வைக்கப்படுவது தொடர்ந்துள்ளது. பொள்ளாச்சி சுற்றுவட்டாரத்தில் வடக்கிபாளையம், நெகமம், கோமங்கலம், கோட்டூர், சமத்தூர், ராமபட்டினம், கோபாலபுரம், சூலக்கல் உள்ளிட்ட சுற்றுவட்டார கிராம பகுதிகளில் தக்காளி விதைப்பில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். நாட்டு தக்காளி, ஆப்பிள் தக்காளி உள்ளிட்டவை சாகுபடி செய்யப்படுகிறது.

இந்த ஆண்டு ஜனவரியில் சாகுபடி செய்யப்பட்ட தக்காளி கடந்த மார்ச், மே மாதத்தில் அறுவடை செய்யப்பட்டு, மார்க்கெட்டுக்கு அதிகளவில் கொண்டு வரப்பட்டது. அதன் பின் கடந்த ஏப்ரலில் பல கிராமங்களில் அறுவடை பணி முடிவடைந்து, புதிதாக தக்காளி சாகுபடியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளதால், அந்நேரத்தில் மார்க்கெட்டுக்கு வரத்து மிகவும் குறைந்தது. இதனால், 14 கிலோ

கொண்ட ஒரு பெட்டி தக்காளி ரூ.750 வரை என கூடுதல் விலைக்கு விற்பனையானது.

இந்நிலையில், சுற்றுவட்டார கிராமங்களில் பெய்யும் பருவ மழையால் சில மாதத்திற்கு முன்பு சாகுபடி செய்யப்பட்ட தக்காளி, தற்போது நன்கு விளைச்சல் அடைந்துள்ளதால், அறுவடை மீண்டும் துவங்கியுள்ளது. இதனால், சுற்றுவட்டார கிராமங்களில் இருந்து மட்டுமின்றி வெளியிடங்களில் இருந்தும் மார்க்கெட்டுக்கு வரத்து அதிகரித்துள்ளது.

இதில், நேற்று வழக்கத்தை விட வரத்து அதிகமாக இருந்தது. இதனால் அதனை குறைந்த விலைக்கு வியாபாரிகள் விற்பனை செய்தனர். இதில், 14 கிலோ கொண்ட ஒரு பெட்டி தக்காளி ரூ.250க்கு விலை போனது. பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு தக்காளி வரத்து அதிகரிப்பால், அதில் பெரும்பாலும் கேரள மாநில பகுதிக்கே சரக்கு ஆட்டோ உள்ளிட்ட வாகனங்களில் விற்பனைக்காக அனுப்பி வைக்கப்படுவதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

## மஞ்சள் விவசாயிகளுக்கு ரூ.2 லட்சம் பொருளீட்டு கடன்

கோவை, : கோவை ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் சரவணன் கூறியதாவது:விவசாயிகளின் விளைபொருள்களான மஞ்சளை கோவை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் பாதுகாப்புடன் இருப்பு வைத்து விற்பனை செய்யலாம். மஞ்சளுக்கு உயர்ந்தபட்ச விலை கிடைக்க விவசாயிகள் விரும்பும் மறைமுக ஏலம் அல்லது பகிரங்க ஏலம் நடத்தப்படுகிறது. விவசாயிகளிடம் கமிஷன், தரகு போன்ற விற்பனை செலவினங்கள் ஏதும் பிடித்தம் செய்யாமல் இலவச சேவையாக செய்யப்படுகிறது.

விலை வீழ்ச்சி காலங்களில் ஒரு விவசாயிக்கு இருப்பு வைக்கப்படும் பொருளின் மதிப்பிற்கேற்ப ரூ.2 லட்சம் வரை குறைந்த வட்டிக்கு பொருளீட்டுக்கடன் வழங்கப்படுகிறது. ஒரு ஆண்டில் ஒரு மெட்ரிக் டன் அளவுக்கு விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் விற்கும் விவசாயிகள் விபத்தின் காரணமாக உயிரிழந்தாலோ, நிரந்தர ஊனமுற்றாலோ ரூ.50 ஆயிரம் முதல் ரூ.ஒரு லட்சம் வரை மான்யமாக வழங்கப்படுகிறது. விவசாயிகள் பயன்படுத்தி கொள்ள வேண்டும். இவ்வாறு கோவை ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் சரவணன் கூறினார்.

**மேய்ச்சல் காடானது கல்லாபுரம் விளைநிலங்கள்**

உடுமலை, : அமராவதி அணையில் இருந்து கல்லாபுரம், ராமகுளம் வாய்க்காலில் தண்ணீர் திறக்கப்படாததால் அங்குள்ள விளை நிலம் மேய்ச்சல் காடாக மாறிவிட்டது. உடுமலை அருகே உள்ளது அமராவதி அணை. திருப்பூர், கரூர் மாவட்டங்களில் 54 ஆயிரம் ஏக்கர் நிலம் இந்த அணையால் பாசன வசதி பெறுகிறது. அதோடு கல்லாபுரம், ராமகுளம் ராஜவாய்க்கால் பாசனத்தில் 3,500 ஏக்கர் நிலங்கள் உள்ளன. தற்போது கேரளாவில் தென்மேற்கு பருவமழை பெய்து கொண்டிருக்கிறது. அணையின் நீராதாரப் பகுதிகளான கேரள மலைப் பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் அணைக்கு நீர்வரத்து அதிகம் உள்ளது. இதனால் அணை நீர்மட்டம் உயர்ந்து கொண்டிருக்கிறது.

90 அடி நீர்மட்டம் கொண்ட அணையில் தற்போது 57 அடிக்கு மேல் தண்ணீர் உள்ளது. திருப்பூர், கரூர் மாவட்ட கிராம மக்களின் குடிநீர் தேவைக்காக அணையில் இருந்து ஆற்றில் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. நேரடி பாசனம் பெறும் கல்லாபுரம், ராமகுளம் ராஜவாய்க்கால் பாசனத்தில் 3,500 ஏக்கர் நிலம் உள்ளது. அதில் 1,500 ஏக்கரில் இரண்டு போகம் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. ஆண்டுதோறும் ஜூன் மாதம் இந்த கால்வாய்களில் தண்ணீர் திறந்து நெல் சாகுபடி நடக்கும்.

ஆனால், இந்தாண்டு ஜூலை மாதம் துவங்கியும் இன்னும் தண்ணீர் திறந்து விடப்படவில்லை. அணையில் 45 அடிக்கு தண்ணீர் இருந்த காலத்திலேயே இந்த கால்வாய்களில் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. ஆனால், 57 அடியை தாண்டி தண்ணீர் இருந்தும் திறக்கப்படவில்லை. பருவமழையில் திருப்தி இல்லை என்று அதிகாரிகள் சொல்கிறார்கள்.

தண்ணீர் திறக்கப்படாததால் நெல் சாகுபடியை விவசாயிகள் இன்னும் துவங்காமல் உள்ளனர். விளை நிலங்கள் தற்போது மேய்ச்சல் நிலமாக மாறிவிட்டது. முதல்போக சாகுபடி தாமதம் ஆவதால் அடுத்து இரண்டாம் போக சாகுபடியும் காலதாமதமாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

## குந்தா பகுதியில் பச்சை தேயிலை வரத்து அதிகரிப்பு தொழிற்சாலைகளில் உற்பத்தி தீவிரம்

மஞ்சூர், : குந்தா பகுதியில் பச்சை தேயிலை வரத்து அதிகரித்துள்ளதால், தொழிற்சாலைகளில் தேயிலை உற்பத்தி தீவிரமடைந்துள்ளது. நீலகிரி மாவட்டம் குந்தா பகுதியில், தேயிலை விவசாயம் முக்கிய தொழிலாக உள்ளது. மஞ்சூர், கைகாட்டி, கிண்ணக்கொரை, எடக்காடு, பிக்கட்டி, இத்தலார், மகாலிங்கா, மேற்குநாடு உள்ளிட்ட 8 கூட்டுறவு ஆலைகளும் ஏராளமான தனியார் தொழிற்சாலைகளும் இப்பகுதியில் இயங்கி வருகிறது. சுமார் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் இந்த தொழிற்சாலைகளில் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்கள் தங்களது தேயிலை தோட்டங்களில் இருந்து பறிக்கும் பச்சை தேயிலையை தொழிற்சாலைகளுக்கு விநியோகித்து வருகிறார்கள்.

இந்நிலையில் குந்தா பகுதியில் கடந்த 5 மாதங்களுக்கும் மேலாக மழை அறவே இல்லாததால் கடும் வறட்சி நிலவியது. வறட்சியின் தாக்கத்தால் தேயிலை தோட்டங்களில் மகசூல் பாதித்து பச்சை தேயிலை வரத்து பல மடங்கு குறைந்து போனது. இதன் காரணமாக தொழிற்சாலைகளுக்கு நாளொன்றுக்கு 4 ஆயிரம் முதல் 6 ஆயிரம் கிலோ வரை மட்டுமே பசுந்தேயிலை வரத்து காணப்பட்டது. இதனால் தேயிலைதுாள் உற்பத்தியும் பெருமளவு குறைந்தது. தினசரி 3 ஷிப்டுகள் இயங்கி வந்த பெரும்பாலான கூட்டுறவு ஆலைகளும் பச்சை தேயிலை வரத்து குறைவால் 1 ஷிப்டு மட்டுமே இயக்கப்பட்டது.

இந்நிலையில் காலநிலையில் ஏற்பட்ட மாற்றத்தால் குந்தா பகுதியில் கடந்த சில வாரங்களாக தொடர்ந்து பரவலாக நல்ல மழை ெபய்து வருகிறது. இந்த மழையின் காரணமாக நீண்ட இடைவெளிக்கு பின் தேயிலை தோட்டங்களில் பசுந்தேயிலை வரத்து அதிகரித்துள்ளது. கடந்த சில தினங்களகவே கூட்டுறவு மற்றும் தனியார் தொழிற்சாலைகளில் பசுந்தேயிலை கொள்முதல் அதிகரித்து வருவதால் தேயிலை துாள் உற்பத்தி தீவிரமடைந்துள்ளது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

## வரத்து அதிகரிப்பால் கடந்த வாரத்தை விட காய்கறிகள் விலை 15 சதவீதம் குறைந்தது



சென்னை,

வரத்து அதிகரிப்பால் கடந்த வாரத்தை விட காய்கறிகள் விலை 15 சதவீதம் குறைந்துள்ளது என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

கோயம்பேடு மார்க்கெட்

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் கடந்த சில மாதங்களாக காய்கறிகள் விலை ஏற்ற இறக்கத்துடன் காணப்பட்டு வருகிறது. கடந்த வாரத்தில் முருங்கைக்காய், தக்காளி, பீன்ஸ் ஆகியவற்றின் விலை உச்சத்தில் இருந்தது. தற்போது அதன் விலை குறைந்துள்ளது.

அதேபோல், சவ்சவ், பீட்ரூட், அவரைக்காய், சேனைக்கிழங்கு, பாகற்காய், மிளகாய், காலிபிளவர் ஆகியவற்றின் விலையும் குறைந்து தான் காணப்படுகிறது.

இதுகுறித்து சென்னை கோயம்பேடு மார்க்கெட் வியாபாரிகள் சங்க ஆலோசகர் சவுந்தரராஜன் கூறியதாவது:–

15 சதவீதம் குறைந்தது

கடந்த வாரத்தை காட்டிலும் தற்போது மார்க்கெட்டுக்கு காய்கறிகள் வரத்து கொஞ்சம் அதிகரித்து இருக்கிறது. இதனால் விலை உயர்ந்து காணப்பட்ட தக்காளி, முருங்கைக்காய், பீன்ஸ் ஆகியவற்றின் விலை பெருமளவில் குறைந்துள்ளது.

மொத்தத்தில் கடந்த வாரத்தை விட காய்கறிகள் விலை 15 சதவீதம் வரை குறைந்து இருக்கிறது. தேங்காய் வரத்தும் அதிகமாக இருப்பதால் அதன் விலையும் மலிவாக உள்ளது. ஒரு காய் ரூ.15 முதல் ரூ.20 வரை விற்பனை செய்யப்பட்டு வந்தது. ஆனால் தற்போது ஒரு காய் ரூ.10 முதல் ரூ.13 வரை விற்பனை செய்யப்படுகிறது.

கோயம்பேடு மார்க்கெட்டில் இன்று (நேற்று) விற்பனை செய்யப்பட்ட காய்கறிகளின் விலை நிலவரம் வருமாறு:–

விலை நிலவரம்

தக்காளி – ரூ.25 முதல் ரூ.35 வரை, பீன்ஸ் – ரூ.40 முதல் ரூ.50 வரை, கேரட் – ரூ.35 முதல் ரூ.40 வரை, பல்லாரி – ரூ.10 முதல் ரூ.20 வரை, உருளைக்கிழங்கு – ரூ.22, நூக்கல் – ரூ.20 முதல் ரூ.25 வரை, சவ்சவ் – ரூ.20, பீட்ரூட் – ரூ.25, முட்டைக்கோஸ் – ரூ.15, மிளகாய் – ரூ.40, இஞ்சி(பழையது) – ரூ.60, இஞ்சி (புதியது) – ரூ.30, சேப்பக்கிழங்கு – ரூ.30, கத்தரிக்காய் – ரூ.15 முதல் ரூ.20 வரை,

வெண்டைக்காய் – ரூ.20 முதல் ரூ.25 வரை, அவரைக்காய் – ரூ.35 முதல் ரூ.40 வரை, கோவைக்காய் – ரூ.15, கொத்தவரங்காய் – ரூ.20, சேனைக்கிழங்கு – ரூ.30, பாகற்காய் – ரூ.25, சாம்பார் வெங்காயம் – ரூ.50, காலிபிளவர் – ரூ.20 முதல் ரூ.30 வரை, முருங்கைக்காய் – ரூ.30 முதல் ரூ.40 வரை, சுரைக்காய் – ரூ.10, பீர்க்கங்காய் – ரூ.20, புடலங்காய் – ரூ.15, தேங்காய் (காய் ஒன்று) – ரூ.10 முதல் ரூ.13 வரை, வாழைக்காய் (காய் ஒன்று) – ரூ.8.
இவ்வாறு அவர் கூறினார்.

## பட்டுசேலை விலை பறக்கப்போகிறது!




**த**மிழில் ஆனி மாதம் இப்போது நடந்துகொண்டிருக்கிறது. தமிழ்மக்கள் ஏன் தென்மாநில மக்கள் வீடுகளில் எல்லாம் ஆனி போய், ஆடி தாண்டி, ஆவணி வந்தவுடன் எங்கள் வீட்டில் கல்யாண மேள சத்தம்கேட்கும் என்று இப்போதே திருமணத்துக்கான ஏற்பாடுகளை தொடங்கிவிட்டார்கள். பொதுவாக திருமண செலவுகளில் பட்டுசேலை செலவு ஒரு முக்கியமான செலவாகும். என்னதான் நவநாகரீகம் ஓங்கிநின்றாலும், மற்றநாட்களில் சுடிதார், சல்வார், பேண்ட்–சட்டை போடும் பெண்கள்கூட, திருமணத்தன்று அது மணப்பெண்ணாக இருந்தாலும், திருமணத்துக்கு போகிறவர்கள் ஆனாலும் பட்டுசேலை கட்டுவதையே பெரிதும் விரும்புவார்கள்.

பட்டுசேலை என்றாலே அது காஞ்சீபுரம், அல்லது ஆரணி பட்டுசேலைகள்தான் திருமணத்துக்கு விரும்பும் சேலைகளாகும். ஏற்கனவே பட்டுசேலை விலை அதிகம்

என்றாலும், இனி காஞ்சீபுரம் பட்டுசேலையின் விலை இன்னும் அதிகமாக உயரப்போகிறது என்பது பெண்களுக்கு அதிர்ச்சியான ஒரு தகவலாகும். உடனடியாக பட்டுசேலைகளின் விலை குறைந்தபட்சம் 15 சதவீதம் உயரப்போகிறது என்று வியாபாரிகள் தெரிவிக்கிறார்கள். இதற்கு காரணம், பட்டுசேலை தயாரிப்பில் மிகமுக்கியமான மூலப்பொருட்களில் ஒன்றான வெள்ளி, மற்றும் பட்டுநூலின் விலை உயர்ந்துவிட்டது. பொதுவாக ஒரு பட்டுசேலை தயாரிக்க சராசரியாக 250 கிராம் வெள்ளி தேவைப்படுகிறது என்கிறார்கள்.

பட்டுசேலை தயாரிப்பில் ஜரிகை மிகமுக்கிய பங்குவகிக்கிறது. ஜரிகை தயாரிப்பில் 52 சதவீதம் வெள்ளியும், மிக சொற்பமான அளவு தங்கம், தாமிரம், அலுமினியம் போன்றவை வேண்டும். ஒவ்வொரு காஞ்சீபுரம் திருமண பட்டுசேலையிலும் குறைந்தபட்சம் 2 மார்க் ஜரிகை தேவை. 2 மார்க் என்றால் 242 கிராம் எடைக்கு சமமானதாகும். காஞ்சீபுரம், ஆரணி சேலைகளில் வெள்ளி ஜரிகை பயன்படுத்தப்படுகிறது. இத்தகைய சூழ்நிலையில், வெள்ளியின் விலை 29 சதவீதம் உயர்ந்துவிட்டது. பட்டுநூலின் விலையும் ஒரு கிலோவுக்கு ரூ.2,600–லிருந்து ரூ.3,400 ஆக உயர்ந்துவிட்டது. மற்ற செலவுகளையும் சேர்த்தால் நிச்சயமாக அடுத்தமாதம் பட்டுசேலையின் விலை உயர்ந்துவிடும் என்கிறார்கள். ஆக, இனி பட்டுசேலை எடுக்கப்போனால் அதிகம்செலவாகும் என்பது பெண்களுக்கு பெரிய ஏமாற்றத்தை அளிக்கும் ஒன்றாகும். திருமணம், பண்டிகைகள் போன்ற நல்லநாட்களுக்கான பட்ஜெட் தொகையை அதிகரித்துவிடும்.

தமிழ்நாட்டில் அரசுக்கு சொந்தமான தமிழ்நாடு ஜரிகை ஆலை நிறுவனம் கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக இயங்கிவருகிறது. இந்த நிறுவனம் ஜரிகை உற்பத்திக்கு தேவைப்படும் மூலப்பொருளான வெள்ளி பட்டு இழையை கொள்முதல் செய்து உற்பத்தி செய்துவருகிறது. நெசவுத்தொழிலின் மிகமுக்கியமான இந்த ஆலை உடனடியாக தனது உற்பத்தித்திறனை அதிகரித்து, பட்டு நெசவாளர்களுக்கு குறைந்தவிலையில் ஜரிகை வழங்குவதை உறுதிசெய்யவேண்டும். பட்டுப்புழு வளர்ப்பு தொழிலும் நசிந்துகொண்டு இருக்கிறது. இந்த தொழிலை வளர்ப்பதற்காக பட்டுவளர்ப்பு தொழிலில் நிறைய விவசாயிகள் ஈடுபடும் வகையில், உயர்விளைச்சல் தரும் மல்பரி செடிரகங்கள் வளர்ப்பு, பட்டுப்புழு

வளர்ப்பு, புழுவளர்ப்பு குடில் அமைக்க நவீன தொழில்நுட்பங்களாலான உற்பத்திமுறைகளை ஆலோசனைகளாகவும், பயிற்சிகளாகவும் வழங்கவேண்டும். இதுபோல 2009–ல் மத்திய அரசாங்கம் அறிவித்த காஞ்சீபுரம் மாவட்டம், பட்டுப்பூங்கா தொடங்கும் முயற்சியில் தமிழக அரசு நிலம் ஒதுக்கீடு செய்துவிட்டாலும், உரியபங்கை செலுத்தி விட்டாலும் மத்திய அரசாங்கம் வழங்கவேண்டிய உதவிகள் சற்று தாமதமாகிக் கொண்டிருக்கிறது. இந்த பட்டுப்பூங்காவில் பட்டுசேலைகள் உற்பத்தி செய்வதற்கான தறிக்கூடங்கள், பட்டுநூலை சாயமிடும் சாய ஆலைகள், வடிவமைப்பு மையம் உள்பட அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளும் இருக்கும். 75 ஏக்கர் நிலத்தில் தொடங்கப்பட இருக்கும் இந்த பட்டுப்பூங்கா அமைப்பதற்கான பணிகளை விரைவுபடுத்தி, அதிலேயே ஜரிகை, பட்டுநூல் உற்பத்தியை தீவிரப்படுத்தவும், நெசவாளர்களுக்கு குறைந்தவிலையில் ஜரிகை, பட்டுநூல் வழங்கவும், இதன் எதிரொலியாக காஞ்சீபுரம் பட்டு சேலைகள் விலை குறையவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இது இல்லத்தரசிகளுக்கு நிச்சயமாக மகிழ்ச்சியைக் கொடுக்கும்.

## முல்லைப்பெரியாறு அணையில் மூவர் கண்காணிப்பு குழுவினர் இன்று ஆய்வு



தேனி,

முல்லைப்பெரியாறு அணையில் மூவர் கண்காணிப்பு குழுவினர் இன்று (வியாழக்கிழமை) ஆய்வு செய்ய உள்ளனர்.

## மூவர் கண்காணிப்பு குழு

தமிழக–கேரள மாநில எல்லையில் முல்லைப்பெரியாறு அணை அமைந்து உள்ளது. 152 அடி உயரம் கொண்ட இந்த அணையில் சுப்ரீம் கோர்ட்டு உத்தரவுப்படி 142 அடி வரை தண்ணீர் தேக்கி வைக்க அனுமதி உள்ளது. அணையின் நீர்மட்ட உயர்வை கண்காணிக்கவும், அணையின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்பார்வையிட்டு ஆலோசனைகள் வழங்கவும் சுப்ரீம் கோர்ட்டு உத்தரவுப்படி மூவர் கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டது.

இந்த குழுவின் தலைவராக மத்திய அரசின் பிரதிநிதி உள்ளார். இதில் தமிழக பிரதிநிதி ஒருவர், கேரள பிரதிநிதி ஒருவர் இடம் பிடித்துள்ளனர். மூவர் குழு தலைவராக இருந்த எல்.ஏ.வி.நாதன் பணி ஓய்வு பெற்றார். அவருக்கு பதிலாக மத்திய நீர்வள ஆணையத்தின் உயர் அதிகாரியாக உள்ள பி.ஆர்.கே.பிள்ளை நியமிக்கப்பட்டுள்ளார். தமிழக அரசின் பிரதிநிதியும் மாற்றப்பட்டு உள்ளார்.

## அணையில் இன்று ஆய்வு

புதிய தலைவர் மற்றும் தமிழகத்தின் புதிய பிரதிநிதியுடன் கூடிய இந்த மூவர் கண்காணிப்பு குழுவினர் முல்லைப்பெரியாறு அணையில் இன்று (வியாழக்கிழமை) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்ய உள்ளனர். இதற்காக இன்று காலை இவர்கள் தேக்கடியில் இருந்து அணைக்கு புறப்பட்டுச் செல்கின்றனர். புதிய தலைவர் பொறுப்பேற்ற பிறகு அணையில் நடத்தப்படும் முதல் ஆய்வு இதுவாகும்.

கேரள மாநிலத்தில் தென்மேற்கு பருவமழை தொடங்கி, அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் அவ்வப்போது மழை பெய்து வருவதை தொடர்ந்து கடந்த சில நாட்களுக்கு முன்பு துணை கண்காணிப்பு குழுவினர் ஆய்வு செய்தனர். அதன் தொடர்ச்சியாக மூவர் கண்காணிப்பு குழுவினர் ஆய்வு நடத்த உள்ளனர். ஆய்வை தொடர்ந்து ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட உள்ளது.

நேற்று முன்தினம் அணையின் பராமரிப்பு பணிகளுக்கு தளவாட பொருட்கள் எடுத்துச் சென்ற வாகனங்களுக்கு கேரள போலீசார் அனுமதி மறுத்தது தொடர்பாகவும், தமிழக பொதுப்பணித்துறை அதிகாரி மீது கேரள வனத்துறையினர் வழக்குப்பதிவு செய்தது தொடர்பாகவும் இந்த ஆய்வுக் கூட்டத்தில் தமிழக பொதுப்பணித்துறை அதிகாரிகள் தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட வாய்ப்புகள் உள்ளதாக பொதுப்பணித்துறை அலுவலர்கள் வட்டாரத்தில் தகவல் வெளியானது.